CHARTERED ACCOUNTANCY
CAB II
ENGLISH MEDIUM
STARTED ON
09.02.2013
VEAL BUSINESS COLLEGE
ADMISSION STILL OPEN
CONTACT : 0777 555 738

பங்குனி மாதம் 03ம் திகதி
March 16, 2013

# மலைமுரசு

MALAIMURASU
அறைவு 01 இயம் 34
உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்
விலை – 20.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# – மேற்கு எதிர் கிழக்கு –

## விவாதப் போட்டியின் இறுதிச் சுற்றுக்குள் நுழைந்தது..

### – திருமலை புனித மரியாள் கல்லூரி அணி –

சக்தி தொலைக்காட்சியின் அனுசரணையுடன் இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே நடந்து வரும் விவாதப் போட்டியின் இறுதிச் சுற்றுக்கு திருமலை மாவட்டத்தின் புனித மரியாள் கல்லூரி தேர்வாகி கிழக்கிலங்கைக்குப் பெருமை சேர்த்துள்ளது.

ஐநூறு ஆயிரம் ரூபா வெற்றிப் பரிசைக் கொண்ட இப்போட்டி பல சுற்றுக்களைத் தாண்டி இறுதிப் போட்டிக்குள் நுழைய சுமார் ஒரு வருடங்கள் ஆகியுள்ளது. அனைத்து மாகாணங்களில் இருந்தும் இப்போட்டியில் பல பாடசாலைகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதது.

தமது வரிசையில் போட்டியிட்ட பல பிரபல பாடசாலைகளைத் தோற்கடித்து தற்போது இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது புனித மரியாள் கல்லூரி. (7ம் பக்கம்)

# ரிசானாவின் சிரச்சேதத்தால் நெருக்கடியில் டிலான்

## – நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணை –

சவூதியில் சர்வதேச ரீதியாக நிரூபிக்கப்படாத கொலைக் குற்றச்சாட்டுக்கு இலக்காகிச் சிரச்சேதம் செய்யப்பட்ட ரிசானை நபீக் அவர்களின் விடயத்தை தப்பாக கையாண்டதாக அப்போதைய வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேராவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட இக்குற்றச்சாட்டானது அக்கட்சியின் 14 உறுப்பினர்களால் ஒப்பமிடப்பட்டு நம்பிக்கையில்லாப் பிரேரணையாக முன்வைக்கப்பட்டுள்ளது. ரிசானா நபீக்கின் விடுதலைக்கு தேவையான உதவிகள் எவற்றையும் வழங்கவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அமைச்சர் டிலான் பெரேரா அதற்கான பொறுப்பையும் தட்டிக்கழித்திருந்ததாக அப் பிரேரணை தெரிவிக்கின்றது. மேலும் அமைச்சர் இவ்விடயத்தை தப்பாக.. (7ம் பக்கம்)

### வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கின் விவசாயிகளுக்கு நிவாரணம்

வெள்ளப்பாதிப்பை எதிர்கொண்ட கிழக்கின் விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்க விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

நிவாரணங்களில் இலவச விதை நெல்லும்,.. (7ம் பக்கம்)

### தெரிவானார் 266வது போப்பாண்டவர்



கர்தினால் ஜோர்ஜ் மாரியோ பேர்கோக் லியோ 266வது போப்பாண்டவராக தெரிவாகியுள்ளார்.

உலகெங்கும் உள்ள சுமார் 1.2 பில்லியன் ரோமன் கத்தோலிக்க ஆலயங்களின் தலைவராக கர்த்தினால் ஜோர்ஜ் மாரியோ செயற்படவுள்ளார். 115 பர்தினால்களின் பெரும்பான்மை வாக்குகளினால் இவர் தேர்வானார். புதிய போப்பாண்டவரின்.. (7ம் பக்கம்)

### – திருமலையில் – தரம் குறைந்த எரிபொருளுடன் கப்பல்

– ஐ.ஓ.சி மறுப்பு –

பதினாறாயிரம் மெட்ரிக் தொன் தரங்குறைந்த எரிபொருளுடன் திருமலைத் துறைமுகத்திற்கு கப்பலொன்று வந்தடைந்துள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்.. (7ம் பக்கம்)

### போதைப்பொருளுடன் இருவர் கைது

மூதூர் பகுதியில் போதைப்பொருள் வைத்திருந்த இரு இளைஞர்கள் மூதூர் காவல்துறையினரால் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த இரு இளைஞர்களிடமும் இருந்து 80 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. பொலிசுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் (7ம் பக்கம்)

### – நாவலடியில் – சிறுமியின் சடலம் மீட்பு

மூதூரின் நாவலடிப் பிரதேசத்தில் பதின்மூன்று வயது மதிக்கத்தக்க சிறுமி ஒருவரின் சடலத்தை 10.03.2013 அன்று பொலிசார் மீட்டுள்ளனர். குறித்த சிறுமி இறால்குழி பிரதேசத்தை சேர்ந்தவர் என்பது காவல்துறை விசாரணையில் தெரியவந்துள்ளது. தொடர்ந்தும் காவல்துறையினரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### காருக்குள் கஞ்சா!

புல்மோட்டை தென்னமரவாடி பகுதியில் கார் ஒன்றுக்குள் இருந்து பதின்மூன்று கிலோ கஞ்சாவோடு மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். வீதிச்சோதனை நடவடிக்கையின் போதே குறித்த கைது விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட மூவரும் செவனகல, வெள்ளவாய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

### தொடர் தாக்குதல்களுக்கு உள்ளாகிவரும் உவர்மலை குருஷேஸ்த்ரா கல்வி நிலையம்

இவ்வருடம் உவர்மலையில் திறக்கப்பட்ட குருஷேஸ்த்ரா கல்வி நிலையம் மீது விசமிகள் தொடர்ந்தும் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக.. (7ம் பக்கம்)

From March 18, 2013
Chartered Accountancy
Full Time Course
"To be the most sought after
Professional Qualification for Business Leaders"

CAB - I Full Time — Time Table: 9:00 - 12:00 Monday Tuesday & Wednesday
CAB - II Part Time — Time Table: Saturday, Sunday & Poyaday
Veal Business College. No 159A, Sea View Road, Trincomalee. 0777 555 738
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

## பெண் தொடர்பான சிந்தனை மாற்றம்!!!

இவ்வாண்டுக்கான மகளிர் தின நாள் இனிதே பலராலும் கொண்டாடப்பட்டுள்ளது. வருடா வருடம் நிகழும் இவ் விழாவின் பின் இடையில் எப்போதுமே மகளிரை நாம் சட்டை செய்வதில்லை. இந் நாள் கொண்டாடப்படுவதன் முக்கிய காரணமே வருடமீறாக மகளிர் மனிதர்களாக மதிக்கப்பட வேண்டும் என்பதே. ஆனால் அந் நோக்கம் நிறைவேறுகின்றதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

மகளிரையும் மாந்தராகப் பார்க்கும் சிந்தனை மாற்றமொன்று நிகழுமாயின் மட்டுமே மகளிர் தினக் கொண்டாட்டம் உண்மையாக மகளிருக்கான சந்தோசப் பெருநாளாக மாறும். பெண்களைப் போகப் பொருளாகப் பார்க்காமல் மாந்தராகப் பார்க்க வேண்டும் என்பது ஒரு சிந்தனை மாற்றமாகும். அச் சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் ஒவ்வொரு தனிமனிதனின் சிந்தனையிலும் மாற்றங்கள் நிகழ வேண்டும்.

முதலாவது மிக முக்கிய சிந்தனை மாற்றம் எதுவெனில் பெண்களைப் பாலியற் பொருளாகப் பார்ப்பதைத் தவிர்க்கும் சிந்தனை மாற்றம் ஆகும். ஆனால் இச் சிந்தனை மாற்றத்தைத் தடுப்பதற்குப் பெண்களே துணை போவது தான் மிகக் கவலைக்குரிய விடயமாய் உள்ளது. உதாரணமாக ஆண்களின் உடலின் மீது விசிறப்படும் வாசனைத் திரவியத்திற்குரிய விளம்பரங்களை நாம் பார்க்கின்றோம் தானே. அவ் வாசனைத் திரவியத்தை விசிறியவுடன் எண்ணிக் கணக்கற்ற பெண்கள் அரைகுறையாடையுடன் அவ் ஆணைக் கட்டித்தழுவ முயற்சிப்பது போலக் காட்டப்படும் விளம்பரப் படங்களால் இளவயது ஆண்களின் மனதிற் பதியும் கவர்ச்சிகரமான பெண் தொடர்பான விம்பம் என்னவாக இருக்கலாம்? பெண் என்பவள் ஒரு போகப் பொருள் என்றல்லவா மனதிற் பதிந்து விடும். இப்பதிவு சந்ததி சந்ததியாகப் பரம்பரை அலகுகள் ஊடாகக் கடத்தப்படும் போது பெண் தொடர்பான மனப்பதிவுகள் எவ்வாறு ஆண்களிடையே மாற்றமடையும்? இதற்குக் காரணமாய் இருப்பவர்களுள் பெண்களும் உள்ளனர் என்னும் உண்மை உறைக்கின்றது அல்லவா?

பணம் அடிப்படைக் காரணியாய் அமையும் போது மனிதப் பெறுமதிகள் மரணித்து விடுகின்றன. யார் மானுடப் பார்வையில் பெண்களைப் போகப் பொருளாக்கிப் பார்த்துப் பணம் உழைக்கின்றார்களோ அவர்களே இந்த மகளிர் தினத்திற்குப் பெரும் பங்குப் பணத்தை வாரியிறைப்பது இந்த உலகின் இப்போதைய உண்மைகளுள் ஒன்று.

தாய் தான் பெண் என்பதை தனிப்பட்ட முறையில் நாம் எமது குழந்தைகளுக்குச் சொல்லித் தருவோம். ஒரு குழந்தையின் மனம் மாறுமாயின் அது வரலாற்று மாற்றத்தை ஏற்படுத்தும். ஏனெனில் ஒரு தனிமனிதன் தான் வரலாற்றைப் படைக்கின்றான்.

-ஆசிரியர்-

## கிழக்கிலங்கைச் சிற்றிதழ்கள் ஒன்றியம்

(எஸ். தனபாலசிங்கம்)

கிழக்கிலங்கையிலிருந்து வெளிவருகின்ற சிற்றிதழ்களுக்கான ஊக்குவிப்பு அனுசரணைகளைப் பெற்றுக்கொடுத்தல், கலை இலக்கியப் படைப்பாளிகளை ஊக்குவித்தல், உயர்ந்த கலை இலக்கிய இரசனை மட்டத்தை ஊக்குவித்து வளர்த்தெடுத்தல் ஆகிய பிரதான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட சிற்றிதழ்கள் ஒன்றியத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு, கண்ணகி மகா வித்தியாலயத்தில் 02.03.2013ம் திகதியன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஒன்றியத்தின் நிர்வாக சபை உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் - ரி. கோபாலகிருஷ்ணன் (செங்கதிர்), செயலாளர் - ரி. இன்பராசா (கதிரவன்), பொருளாளர் - எஸ். மணிசேகரன் (மகுடம்), உபதலைவர் - அக்கரைப்பாக்கியன் (மணிப்புறா), உபசெயலாளர் - எஸ்.ஆர். தனபாலசிங்கம் (நீங்களும் எழுதலாம்)



## சர்வதேச இளம் படைப்பாளர்களுக்கான "சிறுகதைப் போட்டி – 2013"

இளம் படைப்பாளர்களை ஊக்குவிக்கும் முகமாக வடலி வெளியீடு தினக்குரலுடன் இணைந்து சர்வதேச இளம் படைப்பாளர்களுக்கான சிறுகதைப்போட்டியொன்றை சர்வதேச ரீதியில் நடாத்துகின்றது. படைப்பாளிகள் தமது சொந்தப்படைப்புக்களை தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் தட்டச்சு செய்தோ அல்லது கையெழுத்துப் பிரதியாகவோ அனுப்பி வைக்கலாம். பெயர், முகவரி, பிறந்த திகதி, பால் தொலைபேசி இலக்கம் போன்ற விபரங்களை பிறிதொரு தாளில் இணைத்து 30.04.2013க்கு முன்பதாக ஆசிரியர், ஞாயிறு தினக்குரல், இல - 68, எலிகவுஸ் வீதி, கொழும்பு - 15 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

## யானைக் குட்டிகளை ஜப்பானுக்கு வழங்கியுள்ளார் ஜனாதிபதி

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, அந்நாட்டுக்கு இரண்டு யானைக் குட்டிகளை வழங்கியுள்ளார். ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான ராஜதந்திர உறவுகளுக்கு அறுபது ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு இவ்வாறு யானைக் குட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

அமரா, விதுர என்றழைக்கப்படும் இரண்டு யானைக் குட்டிகள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன

## முஸ்லிம் சமூகத்தை பாதுகாக்கத் தவறியது "ஜம்மியத்துல் உலமா சபை" ஹறிஸ் (பா.உ) சாட்டம்

முஸ்லிம் சமூகத்தை பாதுகாக்க அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை தவறிவிட்டதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரிஸ் குற்றஞ்சாட்டியுள்ளார். ஹலால் சான்றிதழ் பிரச்சினையில் முன்னுக்குப் பின் முரணான முடிவுகளை ஜம்மியத்துல் உலமா சபை மேற்கொண்டுள்ளதாகவும் இத்தகைய தீர்மானங்களால் எதிர்காலத்தில் முஸ்லிம்கள் நாட்டில் ஹலால் உணவுகளை உண்ண முடியாத நிலை தோன்றும் எனவும். ஹலால் சான்றிதழ் தொடர்பில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலாமா சபைக்கு ஏதும் அழுத்தங்கள் இருந்திருப்பின் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கலந்தாலோசனையை அவர்கள் பெற்றிருக்கலாம் என்றும் அவ்வாறான நடவடிக்கைகளை அவர்கள் எடுக்காதது குறித்து தான் வருத்தம் அடைகிறேன் என்றும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை இன்று வர்த்தக சமூகத்திற்கு துணைபோயுள்ளது இது பாரிய தவறாகும். இந் நடவடிக்கைகளினால் தான் மிகவும் வேதனையடைவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மழையுடன் வீழ்ந்த பொருட்கள் வேற்றுக்கிரக வாசிகளுடையது

**– அமெரிக்க ஆராய்ச்சியாளர் –**

கடந்த வருடத்தில் பல்வேறு வர்ணங்களில் பெய்த மழையுடன் கிடைத்த அடையாளம் தெரியாத பொருட்கள் வேற்றுக் கிரக வாசிகளுடையவை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வர்ண மழை தொடர்பில் அமெரிக்காவின் ஆராய்ச்சியாளரான ஜெமி வில்லிஸ் இலங்கையில் தங்கி இருந்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வந்தார் தற்போது இந்த பொருட்கள் உலகத்துக்கு வெளியில் வெளிக்கிரகங்களை சேர்ந்தவர்களின் வாகனங்கள் சுற்றித் திரிவதை உறுதிப்படுத்தும் [illegible] அமைவதாக [illegible]

## தம்பலகாமத்தில் காவல்துறையின் நடமாடும் சேவை

தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை முன்னிட்டு தம்பலகாமம் பொலிஸ் பிரிவில் பொலிஸ் நடமாடும் சேவையொன்று நேற்று புதன்கிழமை முள்ளிப் பொத்தானை சிங்கள மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

தம்பலகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி. அபேரட்ன தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கந்தளாய் சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரி நீல் ஹெட்டியாரச்சி, தம்பலகாமம் பிரதேச செயலாளர் ரோகான் தசாநாயக்க ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் இறுதி நிகழ்வாக பரிசளிப்பு மற்றும் இசை நிகழ்வும் இடம்பெற்றுள்ளதுடன் திஸ்ஸபுர பௌத்த நிலையமொன்றும் கந்தளாய் சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரியால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

## பெண்கள் தினத்தை முன்னிட்டு ஊடகவியலாளர் சந்திப்பு

அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு பெண்களுக்கெதிரான வன்முறைகள் நிறுத்தப்படவேண்டும் என்ற தொனியில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

திருக்கோணமலை விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் மற்றும் திருமலை பெண்கள் சமாசம் இணைந்து நடாத்திய இந்நிகழ்வு 08.03.2013 அன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சர்வதேச மகளிர் தினம் ஒரு கொண்டாட்ட நிகழ்வா? அல்லது பெண்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் நாளா? என்ற தொனிப்பொருளில் ஊடக அறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

## வயதடையாத 1800 பெண்கள் வல்லுறவுக்குட்பட்டுள்ளனர்

கடந்த வருடம் காவல்துறைக்குக் கிடைத்த தகவல்களின் படி மட்டும் ஆயிரத்து எண்ணூறு பராயம் அடையாத பெண் குழந்தைகள் வல்லுறவிற்குட்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

இவற்றுள் அறுநூற்றிரண்டு பேர் கடும் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவற்றுள் ஐநூற்றேழு வழக்குகள் தொடர்பாகக் காவல்துறை தெரிவித்துள்ளது. மேலும் அதிகலவானோர் பாலியல் வன்புணர்விற்கு உட்பட்டுள்ள்னர் என காவல்துறை தெரிவித்துள்ளது. மேலும் பராயமடையாத பெண்களின் விருப்பத்துடன் மேற்கொண்டிருந்தவர்களும் சட்டப்படி குற்றவாளியாகவே தண்டிக்கப்பட்டுள்ளனர் என காவல்துறை தெரிவித்துள்ளது. கடந்த வருடம் இருபத்தெட்டு முறைப்பாடுகளே பெண்களுக்கெதிரான பாலியல் முறைப்பாடுகளாகக் காவல்துறையில் பதிவாயியுள்ளன.

உண்மைக் குற்றங்களின் எண்ணிக்கை இதைவிட மிக அதிகமாக இருக்கும் எனவும் சமூக அழுத்தங்கள், பயம், வறுமை போன்றவற்றால் பெரும்பாலான குற்றங்கள் வெளித்தெரிவதில்லை எனவும் பெண்ணியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெருவோரத்து பஜார் பொடியனுக்குத் தெரிந்த பெண்ணியமும் யதார்த்தமும்

சத்தியன்

2006 நவம்பர் 5ம் திகதி இக்கட்டுரை "தினக்குரல்" இவள் சக்தி பகுதியில் வெளிவந்திருந்தது. அப்போது சில எதிர்வினைகளையும் தோற்றுவித்திருந்தது. இப்போது இதில் சொல்லப்பட்ட விடயங்கள் இன்னும் வேறு பார்வைக் கோணங்களிலும் பார்க்கலாம் என்று தோன்றுகிறது. ஆயினும் மூலத்தை நான் மாற்ற விரும்பவில்லை ஏனெனில் இது

1. ஒரு பஜார் இளைஞன் தான் அடிக்கடி சந்திக்கின்ற, வசிக்கின்ற பஜார் இளைஞர்களைப் பற்றி எழுதியது
2. இலங்கைத் தேசிய நாளிதழில் வெளிவந்த பஜார் இளைஞர்களைப்பற்றிய முதலாவது கட்டுரை

முதலில் இந்தக் கட்டுரையை வாசிக்க நீங்கள் ஆர்வம் காட்டுவீர்களா? என்பது சந்தேகம் தான். ஏனெனில், பஜார் இளைஞர்களை அவர்களது கருத்துகளை எமது சமூகம் எந்தவொரு நடவடிக்கைகளிலும் கேட்பதுமில்லை. அனுமதிப்பதுவுமில்லை. ஆயினும், எல்லா இடங்களிலும் எல்லாத் தெருக்களிலும் எமக்குக் கணிசமான நண்பர்கள் உள்ளார்கள். அந்த ஏரியாவின் நியமிக்கப்படாத காவலராகவும், முதன்முதலில் அந்த ஏரியாவுக்குள் வருபவர்கள் அந்த ஏரியாவை எடைபோட உதவும் குறிகாட்டிகளாகவும் அநேகமாக எல்லா சமுதாயப் பிரச்சினைகளிலும் இவர்களின் பங்களிப்பு சிறிதளவாவது இருக்கும்.

அதேபோல் சாதாரணர் செய்ய அஞ்சும் ஆக்கபூர்வமான சமுதாய வேலைகளை செய்வதுவும் இவர்களாகத்தான் இருக்கும். இவர்களையும் நல்ல பணிகளில் ஈடுபட வைக்கலாம். ஆயினும் எம் சமூகம் அதைச்செய்யாமல் அவர்களை சமுதாயத்துக்கு வேண்டாதவர்களாகவே நோக்குகிறது. எம் மத்தியில் சமூகத்தை பலப்படுத்தும், சமூகத்தை முன்னேற்றும் வேலைகளைச் செய்கின்ற சமூக செயற்பாட்டாளர்கள், சமூகப்பணியாளர்கள் கூட இவர்களைக் கருத்தில் எடுப்பதில்லை. எனக்குத் தெரிந்து எந்தவிதமான பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகளிலும் பஜார் இளைஞர்கள் கலந்து கொண்டதில்லை. இதில் கலந்து கொள்ள அவர்கள் ஆர்வம் காட்டுவதுமில்லை.

மேற்குறிப்பிட்ட நிகழ்வில் கலந்துகொள்ளும் அனைவரும் ஆர்வத்தாலும் அக்கறையாலும் மட்டும் கலந்து கொள்வதில்லை என்பது எம் எல்லோருக்கும் தெரியும். இது ஒருபுறம் இருக்க கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகளுக்கு இவர்களை யாரும் அழைப்பதுமில்லை. இதன் மூலம் சமூகத்தில் பல வேலைகளில் ஈடுபடப்போகிற ஆற்றல் மிக்க இளைஞர் சமுதாயத்தின் கணிசமான தொகை சமூகத்தைப் பற்றி அக்கறையில்லாமலும் இச் செயற்பாடுகளில் பங்குபற்றாமலும் போகிறது.

மற்ற சமூக செயற்பாடுகளை விட பெண்ணியற் செயற்பாடுகளில் இவர்கள் முக்கிமானவர்கள். பெண்களுக்கு பாதிப்புகளும் தொந்தரவுகளும் இவர்களால் மட்டுமல்ல ஆனால், இவர்களால் ஏற்படும் பிரச்சினைகள் வெளித்தெரிகின்றன. (இங்கு பாரிய குற்றங்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை) சாதாரண பெண்ணிய விடுதலை வேலைகளில் ஈடுபடுபவர்கள் தாக்குதல்களுக்கும் கேலிகளுக்கும் உள்ளாவதில் இவர்களின் பங்களிப்பு முக்கியமானது.

இவர்களுக்குத் தன்டனை வாங்கிக் கொடுப்பதன் மூலம் இப்பிரச்சினையை ஒழித்துவிட முடியாது. ஏனெனில், பஜார் என்பது குறிப்பிட்ட சிலர் மட்டும் உள்ள குழு அல்ல, தலைமுறை ரீதியாக வருவது. அதற்கு ஏற்றபடி தன்னியல்பையும் மாற்றக் கூடியது. மற்றவர்கள் மதிக்கும் சமூக விதிகளையும், ஒழுக்கங்களையும் பின்பற்றுவதில் ஆர்வம் காட்டாதது. பழிவாங்கும் இயல்புள்ளவர்களே பெரும்பாலும் அங்கம் வகிப்பது. (இது சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சில நல்ல பஜார்களுக்குப் பொருந்தாது) எனவே, ஒரு பஜாருக்கு தண்டனை கொடுத்தால் ஏனைய பஜார் அந்த வேலையை நூதனமாகவும் பிடிபடாமலும் செய்வதற்கு முயற்சி செய்யுமே தவிர, செய்யாமல் விட அல்ல. ஒரு பஜாருக்கு தண்டனை கிடைத்த செயலை தண்டனை கிடைக்காதவாறு செய்து தன் வல்லமையை காட்டவே வேறொரு பஜார் முயற்சி செய்யும்.

ஆகவே, இவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பதில் முனைப்புக் காட்டாமல் அவர்களுக்கு உங்கள் கருத்துகளையும் அதில் உள்ள நியாயத்தையும் முன்னேற்றத்தையும் நன்மையையும் விளங்கப்படுத்துவதன் மூலம் அவர்களை சமூக செயற்பாடுகளுக்கு ஆதரவானவர்களாக மாற்றும் வேலையைச் செய்ய வேண்டும்.

ஏனெனில், இவர்கள் தான் பின்னர் குடும்பஸ்தர்களாகி வீட்டு வன்முறைகளை அதிகமாகவும் பாரதூரமான அளவுக்கும் ஏற்படுத்துபவர்களாக உள்ளார்கள். அது தவிர பெண் விடுதலையை பெருமளவில் மறுப்பவர்களாகவும் இவர்கள் உருவாகிறார்கள். எனவே, இவர்களை பெண்ணியச் செயற்பாடுகளில் உள்வாங்குவதன் மூலம் பெண்ணியச் செயற்பாடுகளின் வெற்றி கணிசமான அளவு இருக்கும். எவ்வாறெனில், பெண் அடக்கு முறைக்குக் காரணமான பாரம்பரியங்கள், இறுக்கமான கலாசாரங்களை இவர்கள் பெருமளவில் மதிப்பது இல்லை. அது மட்டுமல்லாமல் அவற்றை மீறக்கூடியவர்களாகவும் இவர்கள் இருக்கிறார்கள்.

இன்றைய பெண் விடுதலை, பெண்ணியச் செயற்பாடுகள் என்பவற்றில் ஈடுபடுபவர்கள் செய்வது என்ன என்பது பஜாரில் இருந்து போக்கிரித்தனம் செய்யும் நான் மதிப்பிட்டால் மேற்குறிப்பிட்ட வேலைகளில் உள்ளவர்கள் கோபிப்பதோடு கவனத்திலும் கொள்ளமாட்டார்கள். ஆயினும், மேலே சொன்ன காரணங்களில் நானும் பங்காளி என்ற வகையில் எம்மைப் பற்றி மதிப்பிடும் பெண்ணியவாதிகளின் செயற்பாடுகள் பற்றி கருத்துக்கூற எமக்கு உரிமையுண்டு. இன்று பெண்ணியச் செயற்பாடு என்பது வெறும் கோட்பாட்டு அடிப்படையிலும் வெறுமனே வாங்கிய சம்பளத்துக்கான கடமையாகவுமே உள்ளன. (அர்ப்பணிப்போடு பெண்ணிய செயற்பாடுகளில் ஈடுபடும் சகோதரிகள், நண்பிகள், மதிப்பிற்குரியர்கள் மன்னிக்க) அவர்கள் தங்கள் சமூகத்தில் செய்யும் வேலைகளை வீட்டில் செய்வதில்லை பெண் அடக்குமுறையை சமூகத்துக்குள் கொண்டு வந்த, அதை இன்னும் நிலை நிறுத்துகின்ற மரபுகள், கலாசாரங்கள், விழுமியங்களைத் தொடர்ந்தும் பேணுவதில் ஆர்வம் காட்டுபவர்களாகவே உள்ளார்கள். அறிக்கைகளையும் கட்டுரைகளையும் மட்டும் எழுதிக் கொண்டு உள்ளார்கள். பெண்ணியச் செயற்பாடுகளில் கலந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். இதில் வேதனையான விடயம் என்னவென்றால், இவர்களுக்கு பெண்ணியச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு பெருந்தொகையான சம்பளமும் வாகனங்களும் வழங்கப்படுவது தான். (பெண்ணியச் செயற்பாடுகளில் ஈடுபடும் மதிப்புக்குரியவர்களும் உயர்பட்டங்களிலும் உள்ளவர்கள் இங்கு கருத்தில் கொள்ளப்படவில்லை) இவர்களை உயர்மட்டத்தில் உள்ளவர்கள் நம்புவதும், அவர்கள் மூலம் சமூகத்தில் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்பதும் தான் இன்னும் வேடிக்கையானதும் வருத்தத்திற்குரியதாகவும் உள்ளது.

இவர்களுக்கு பெண் விடுதலை என்பது கூட விளங்கியுள்ளதா என்பது கூட இங்கு யோசிக்கப்பட வேண்டிய விடயம். இருக்கும் அமைப்பை மாற்றாமல் அதன் ஆதிக்க சக்திகள் ஏற்றுக் கொள்ளும் சிறிதளவு மாற்றங்களை ஏற்படுத்தவே இவர்கள் விரும்புகிறவர்கள். இதன் மூலம் சமூகத்தில் தங்கள் இருப்பையும் நிலையையும் தக்க வைத்துக் கொண்டு முற்போக்கானவர்கள் என்ற பெயரையும் சம்பாதித்து விடுகிறார்கள். இங்கு ஒன்று கவனிக்கப்பட வேண்டும். ஆதிக்க சக்திகள் ஓரளவு சுதந்திரத்தையும் விடுதலையையும் தருவதன் காரணம் அதைக்கூடத் தராவிட்டால் அடக்கப்பட்டவர்கள் முழுமையான விடுதலைக்காகப் போராடி தாம் அனுபவிக்கின்ற வசதிகளையும் வாய்ப்புகளையும் இல்லாமல் செய்து விடுவார்களே? என்ற பயத்தில் தான். என்பதை விளங்கிக் கொண்டுள்ளார்களா? அல்லது கிடைக்கின்ற வெற்றியைப் பயன்படுத்தி மேலும் வெற்றிகளைப் பெற முயலுகிறார்களா? இதற்கான விடைகள் என்னவென்பதை நான் சொல்லத் தேவையில்லை.

மறுபுறம் எம் மத்தியில் பால் நிலை வேலைகளைச் செய்கின்றவர்கள் பெரும்பாலும் நடுத்தர அல்லது உயர்நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த ஓரளவு படித்த பெண்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் தம்முள் ஏற்கனவே உள்ள சமூக ஒழுக்கங்களையும் மரபுகளையும் பெரிதும் மதிப்பவர்களாக உள்ளார்கள். இதனால் தான் இவர்கள் குறிப்பிட்ட அளவுக்கு மேல் அவற்றை கேள்விக்குள்ளாக்குவதை, உடைவு ஏற்படுத்துவதை விரும்புவதும் இல்லை. தவிர பெண்ணியச் செயற்பாட்டாளர்களாக உள்ளவர்கள் பெரும்பாலும் சமூகத்தின் பார்வையில் அவ்வளவாக நல்ல அபிப்பிராயம் இல்லாதவர்களாகவுமே இருக்கிறார்கள். இவர்களைப் பற்றி அவதூறுகளை பரவல் படுத்துபவர்களாகவும் பொய்யான உறுதிப்படுத்தல்களைச் செய்பவர்களாகவும் மேற்சொன்ன எம் நண்பர்களே உள்ளார்கள். இது ஆணாதிக்கத்தின் ஒரு வெளிப்பாடு தான். ஆயினும் இதை நாம் ஒதுக்கிவிட முடியாது. பெரும்பாலும் இவ்வாறு பெயர் எடுப்பது களத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் தான். இப்பணியாளர்கள் உருவாக்குகின்றவையே இன்று ஓரளவு பேசும் வெற்றிகள். ஆனால், இவ் வெற்றிகளுக்கான பெயர்களும் பலன்களும் இவர்களை முழுமையாகச் சென்றடைகிறதா என்பது யோசிக்க வேண்டிய விடயம்.

இப்போது உள்ள பெண் விடுதலை செயற்பாடுகள் பெரும்பாலும் அரச சார்பற்ற நிறுவனங்களின் திட்டங்களாவே உள்ளது. தற்போது பெரும்பாலான உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களில் பெண்ணியம் சார்ந்த கருத்திட்டங்களை முன்னெடுப்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றன. இத் திட்டங்களுக்கு அதிகளவு நிதியை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பது இதற்கான பிரதான காரணமாக இருக்கின்றது. இவர்கள் தமக்கு நிதி வழங்கும் நிறுவனங்களுக்கு விசுவாசமாகவே இருப்பதை விரும்புகிறார்கள். இவர்களை இணைத்து ஒரு சுயாதீன அமைப்புகளாக இயங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது ஆரம்பத்தில் இச் சுயாதீன அமைப்புக்களில், நிதி வழங்குநரின் நிகழ்ச்சித் திட்டத்திற்கு வெளியில் சில வேலைகளை செய்வது போல் உள்நுழையும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களில் வேலை செய்யும் எம்மவர்கள் படிப்படியாக மீண்டும் உருவாகும் சுயாதீன அமைப்புகளை தங்கள் நிறுவன மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் முயற்சிகளை நூதனமாக மேற்கொள்கிறார்கள். இவர்களின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சுயாதீன செயற்பாட்டாளர்களை ஓரங்கட்டி விடுகிறார்கள். இவர்களிடம் தொடர்ந்தும் நிதியைப் பெறும் நோக்கில் உள்ள உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் இவர்களின் செயற்பாடுகளை மௌனமாக அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தங்கள் திட்டங்களுக்கான அறிக்கைகளில் வேண்டுமானால் இவர்கள் எம் சமூகத்தில் நிலவுகின்ற பிரச்சினைகளை இல்லாமல் செய்வதற்கு தாங்கள் தொடர்ச்சியாக போராடிக் கொண்டிருப்பவர்கள் போல சொல்லிக் கொள்ளலாம். ஆனால் யதார்த்தத்தில் அப்படியில்லை என்பது மட்டுமல்ல, தற்போது எம் மத்தியில் உள்ள பல பிரச்சினைகளை இவர்கள் கண்டு கொண்டதாகவோ அல்லது கருத்தில் எடுத்ததாகவோ தெரியவில்லை. தமக்கென சில குழுக்களை உருவாக்கியுள்ள இவர்கள் அவர்களுக்கு பல விடயங்களைச் சொல்லாமல் மறைப்பதனூடாகவும் அவர்கள் சில விடயங்களை அறிந்தால் அதைதட்டிக் கழிப்பதனூடாகவும் தாம் மேதைகள் என்ற தோற்றப்பாட்டை கட்டமைத்து தம்முடைய மேலாண்மையை தக்க வைத்து கொள்கிறார்கள். உண்மையான பிரச்சினைகள் உள்ள அடித்தட்டு மக்களை இவர்கள் எந்தளவு தூரம் கவனத்தில் கொள்கிறார்கள் என்பதும் இங்கு ஆராயப்பட வேண்டிய விடயம்.

இதுவே இவர்களின் தோல்விகளுக்கு காரணமாக அமைகிறது. இவர்களோடு அல்லது இவர்களின் செயற்பாடுகளில் மக்கள் எந்தளவுக்கு பங்கேற்கிறார்கள் அல்லது ஆதரவு அளிக்கிறார்கள் என்பதை ஆராய்ந்தால் தோல்வி என்று குறிப்பிட்டதன் அர்த்தம் விளங்கும். சமீபத்திய உதாரணம் மட்டகளப்பில் அரச சார்பற்ற நிறுவனங்களில் வேலை செய்யும் பெண்களுக்கு எதிராக வெளிவந்த பிரசுர விவகாரம்.

இந்தப் பிரச்சினை வேறு பல அபிவிருத்தி, சமூக மாற்றத்துறைகளில் இல்லையா? என நீங்கள் கேட்கலாம். இருக்கின்றது ஆயினும், எல்லாப் பிரச்சினையிலும் பால்நிலை சம்பந்தப்பட்டுள்ளது என்பதாலேயே இதை முதலில் பெண்ணியத்தை நோக்கி எழுதினேன். இக் கட்டுரையை சம்பந்தப்பட்டவர்கள் ஏற்காமல் இருக்கலாம். சிலர் கவனத்தில் எடுக்காமல் இருக்கலாம். ஆனால், நான் என்னை தெளிவாக அடையாளப்படுத்தி என்னளவில் மிக நேர்மையாகவே இக் கருத்துகளை முன்வைத்தேன். என்னை மறுப்பவர்கள் அல்லது இதற்கு எதிர்வினை புரிபவர்கள் மனச்சாட்சியை மதித்து தம்மை வெளிப்படுத்தி இதில் நான் குறிப்பிட்டுள்ளவை பொய்யென நிரூபியுங்கள். இந்தக் கட்டுரை பேசியது உண்மையையே. இதன் மூலம் நான் கோருவது நான் குறிப்பிட்டவர்கள் தம் தோல்விகளை ஒப்புக் கொண்டு தம் செயற்பாடுகளில் ஒதுக்கி வைத்தவர்களையும் இணைத்து வெற்றியை நோக்கி நகருவதற்கான மாற்றங்களையே! அதைச் செய்யுங்கள். அதைவிடுத்து இக் குரலை பெண்ணியத்திற்கு எதிரானதாக தயவுசெய்து சித்தரிக்காதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற வாரம்...
இறுதியாக போரிட்டு முடக்கிப்போட்ட இடம்தான் பொலநறுவை மட்டக்களப்பு பாதையில் அமைந்துள்ள தம்பன்கடுவை என்று அழைக்கப்படும் தம்பன் கடவை என்ற இடமாகும்.

# தம்பன் கோட்டை

தம்பலகாமம் த. வேலாயுதம்

பாகம் - 7

வரலாற்று நாவல்

கோணேஸ்வர ஆலயத்திற்கு அண்மையில் உள்ள வெண்பில் சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பு இன்று கட்டிடச் சிதைவுகளால் உயர்ந்த மேட்டு நிலமாக பற்றைக்காடுகள் எழுந்து காணப்படுகிறது. கோட்டையைச் சுற்றிலும் நாற்புறமும் பெரிய அகழி இருந்து தூர்ந்துபோய், மழைக்காலத்தில் மட்டும் நீர் நிறைந்து கேணிபோல் தென்படுகிறது. தூர்ந்த அகழியில் பிரம்பும் நாணலும் புதராகிப் போயுள்ளன. காடாகிப் போய்விட்ட மேட்டு நிலம் இன்றும் "கோட்டை" என்றே அழைக்கப்படுகின்றது.

தொன்மைமிக்க தமிழ்ப்பட்டணத்தில் கலிங்க விஜயபாகு கட்டிய கோட்டையில் நிறுத்தப்பட்டிருந்த படைகளுக்கு மலையாள வீரனான தம்பன் தளபதியாக இருந்து கிழக்கிலிருந்து வந்த படைகளை முறியடித்து மன்னனின் நோக்கத்தை நிறைவேற்றினார்.

அவனது வீரத்திற்கு அடையாளமாகத் தம்பன் கோட்டை என்று அழைக்கப்பட்ட கோட்டைமீது அந்த இராப்பொழுதில் குமரன் வானை அண்ணாந்து பார்த்தபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். நிர்மலமான வானில் விண்மீன்கள் கண்சிமிட்டி அவனுக்கு உற்சாகம் ஊட்டின. கோட்டைச்சுவரில் சொருகியிருந்த பந்தங்களின் வெளிச்சம் அவன் முகத்தில் விழுந்து அவனது கம்பீரத்தை கூட்டிக்காட்டின.

என்னால் தளபதி தம்பன்போல இந்தக் கோட்டையைக் கட்டிக்காக்க முடியுமா? புகழ்பெற்ற அவர் எங்கே... நான் எங்கே...?

அவன் தன்பார்வையை கோட்டைச் சுவர்கள் மீது ஓடவிட்டான். என்னால் முடியுமென்றபடியால்தானே மன்னர் என்னை இங்கு அனுப்பியிருக்கின்றார்?.. சந்தர்ப்பம் வரும்போது திறமையைக் காட்ட வேண்டியதுதான்.. ஆனாலும் கேள்விப்படுகின்றதைப் பார்த்தால் கிழக்கிலிருந்து இந்த ஜென்மத்திற்கே மோதல் வராது போலிருக்கிறதே.... தம்பன் தளபதி கிழக்கு எதிரிகளின் முது கெலும்பை உடைத்துவிட்டார் என்றல்லவா கூறுகின்றார்கள்.

உண்மையில் அவர் பெரும் வீரர்தான். அவரது ஆற்றலுக்கு முன் நான் ஒரு பொருட்டே அல்ல. அவனது சிந்தனை நீண்டு கொண்டே போனது. இத்தனை பெருமைக்குரிய தளபதி நோய்வாய்ப்பட்டார் என்ற செய்தி எல்லோருக்கும் பெருந்துயரத்தை கொடுக்கவே செய்தது.

தம்பன் தளபதி நோய்க்காளான போது அரச மருத்துவர்கள் அவருக்கு ஓய்வும், சிறந்த மருத்துவ வசதிகளும் தேவை என்றபடியால், அவர் தாயகம் திரும்புவதே சாலவும் சிறந்தது என்று கடுமையான ஆலோசனைகளைக் கூறியிருந்தார்கள். மன்னனும் அப்படிச் செய்வது தனது கடமையென்று தளபதியை தாயகம் அனுப்பிவைத்தார். முதலில் கோட்டையை விட்டு வெளியேற ஒப்புக்கொள்ள மறுத்த தளபதி தம்பன், தனக்குப் பிறகு தளபதியாக நியமிக்கப்படுவது யாரென்று அறிந்தபிறகுதான் தாயகம் திரும்ப சம்மதித்தார். தனது சிபாரிசை மன்னர் ஏற்றதையிட்டு அவர் சந்தோசப்பட்டார்.

உதயகுமரன் சக்கரவர்த்தியின் ராணியின் மூத்தசகோதரி ரத்தினாவதி தேவியின் மகன், போரில் ஆற்றல் மிக்கவன், இளைஞன், நல்லபுத்திசாலி, திறமைசாலி, அவனை விட்டால் தளபதி தம்பனின் இடத்திற்கு வேறு பொருத்தமானவன் கிடைக்க-மாட்டான் என்ற உறுதி மன்னனுக்கு இருந்தது.

புதிய தளபதியாக வந்து பொறுப்புக்களைப் பாரம் எடுத்து இரண்டு மூன்று நாட்களில் ஊரை அறிந்துகொள்ள அவன் புரவிப்பயணத்தை மாலை வேளைகளில் மேற்கொள்ள தலைப்பட்டான். இப்படியான ஒரு பயணத்தில்தான் அவன் ரங்கநாயகியை ஆற்றுமணலில் ராகம் பாடிக்கொண்டிருந்த நிலையில் சந்தித்தான்.

அவளது நினைப்பு மனதில் பட்டதுமே அவனைச் சுற்றியிருந்த அனைத்தும் அந்தக் கோட்டை, அதன்பொறுப்பு காவல்நின்ற வீரர்கள், முறைக்காவல் அழைப்பொலிகள் எல்லாமே மறந்துபோயின. இதை அவன் உணர்ந்து கொள்ளாமலில்லை மெல்லச்சிரித்துவிட்டு தலையை அசைத்தவன் ரங்கநாயகியின் நினைப்பில் மூழ்கிப்போனான்.

அவளது குரலில்தான் எத்தனை இனிமை. அவள் வாயினின்று புறப்படும் இனிமையான ராக ஆலாபனை உயர்ந்ததா? இல்லை அளவெடுத்து கடைந்தெடுத்தது போன்ற அவயவங்கள் கொண்ட வனப்புமிக்க அவளது சௌந்தர்ய உடலழகு சிறந்ததா? தாமரை மொட்டு முகத்தில் வெட்டிச் செல்லும் வண்டுகள் போன்ற அந்தக் கண்கள், அவளிடம் உள்ள ஆற்றல், அழகு என்ற இரண்டு மேன்மைகளுமே அவனைப் பெரிதும் கவர்ந்தன.

அவனுக்குத் தெரியும், அவன் அவளுக்கு அடிமையாகிவிட்டான். ஆற்றல் மிக்க வீரன் ஒரு சாதாரண பெண்ணிடம் மனதைப் பறிகொடுத்து விட்டான்! அவள் எனக்கு மனைவியாவாளா? அப்படி அவள் கிடைத்து விட்டால் என்னைப்போல பாக்கியசாலி யாரும் இருக்க முடியாது?

தனக்குத்தானே சிரித்துக் கொண்டான்.

உயிரைத் துச்சமாக எண்ணி போர்க்களத்தில் நுழைந்து வாளைச்சுழற்றி எதிரியைப் பந்தாட அவன் தயங்கியதில்லை. அஞ்சிய-தில்லை. ஆனாலும் அவளை இழப்பதென்பது அவனுக்கு வாழ்வே இல்லைப்போலிருந்தது. நாளை அல்லது மறுநாளாவது அவளைச் சந்திக்கும்போது முடிவொன்றைக் கேட்டுவிடுவதுதான் என்ற தீர்மானத்துடன் ஒரு முறை கோட்டை பாதுகாப்புக்களைப் பார்த்துவிட்டு நித்திரைக்குச் சென்றான் உதயகுமரன்.

தொடரும்...




## திருகோணமலையில் சோழர்களால் ஏற்பட்ட மாற்றங்கள்...

03. கி.பி 12 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அதாவது கி.பி 1103 ஆண்டுக்குரியதான கல்வெட்டில் கந்தளாய் என்றே அக்காலத்தில் இப்பிரதேசம் அழைக்கப்பட்டதாக அறிய முடிகிறது. அத்துடன் பொலநறுவையை ஆட்சி புரிந்த விஜயபாகு தனது 37ம் ஆட்சியாண்டில் தானமளித்தான் என்பதையும் அறியமுடிகிறது. இதுவரை இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் இதில்தான் முதன் முறையாக திருப்பள்ளியெழுச்சி, திருப்போனகம் என்னும் சொற்பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் குறிப்பிடுகிறார்.

இவை தவிர சோழ இலங்கேஸ்வரன், சோழர்களின் ஆட்சிமுறை, என்பனவற்றோடு தமிழர்களின் தொன்மையையும் ஆதாரப்படுத்தி நிற்கும் இச்சாசனங்கள் அரிய பொக்கிசங்களாகும்.

**வெல்கம் விகாரை**

"வெல்கம் விகாரை" திருகோணமலையில் உள்ள பலரும் அறிந்த இடம். எனினும் அதற்கு "இராசராசப் பெரும் பள்ளி" எனும் இன்னுமொரு பெயர் இருக்கும் விடையத்தைச் சில வருடங்களுக்கு முன்னமே வரலாற்று நூல்கள் மூலம் அறிந்துகொண்டேன். "இராசராசப் பெரும் பள்ளி" எனும் பெயர் இங்குள்ள மக்களின் பேச்சுவழக்கில் இல்லையாயினும் இதனுடைய வரலாற்றுப் பின்னணி அறியப்படவேண்டியதுதாகும்.

திருகோணமலை நகரத்தில் இருந்து வவுனியா செல்லும் பாதையில் கன்னியா வெந்நீரூற்றைத் தாண்டி வரும் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட பிரதேசம் இராசராசப் பெரும் பள்ளி, வெல்கம் விகாரை.

திருகோணமலையில் இந்து - பௌத்த மத முரண்பாடு கி.பி 3ம் நூற்றாண்டில் மகாசேனன் திருக்கோணேச்சரத்தை அழித்து கோகர்ண விகாரையை நிறுவ முற்பட்டதுடன் தீவிரம் பெறுகிறது.

"மகாசேனனின் துன்புறுத்தல் காரணமாக தற்காலிகமாகவே இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டது. பௌத்த மதம் இந்து மத்ததுடன் போட்டி போட்ட






போதும் பௌத்த மதம் துறைமுக நகரான திருகோணமலையில் இருந்து பின்வாங்க வேண்டி இருந்தது." என்ற பேரசிரியர் சேனக பரணவிதானவின் கூற்றும், "சோழர்கள் இலங்கையில் பல பௌத்த பள்ளிகளை அழித்ததார்கள்" என்ற சூளவம்சத்தின் கூற்றும் அக்காலத்தில் இருந்த மதமுரண்பாட்டை விளக்குவதாக இருக்கிறது.

வெல்கம் விகாரை என்னும் இந்தப் பௌத்தப் பள்ளியின் தோற்றம் பற்றிய தெளிவான வரலாற்றுத் தகவல்கள் இல்லையாயினும், இது சோழருடைய படையெடுப்புக்கு( 10 ம் நூற்றாண்டு) முன்னமே இருந்திருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது.

சோழருடய ஆட்சியின் கீழ் திருகோணமலை வந்தபின் இதன் பெயர் இராசராசப் பெரும் பள்ளி என சோழ ஆட்சியாளர்களால் மாற்றப்பட்டிருக்கிறது. இங்கு கிடைக்கப் பட்ட அதிகளவான அறக்கொடைச் சாசனங்கள் தமிழ் மொழியில் இருப்பதும் , சோழ ஆட்சியாளர்களால் இவ்விகாரை பாதுகாக்கப்பட்டு, ஆதரவளிக்கபட்டமையையும் ( இராசராச சோழன் 84 பசுக்களைத் தானம் செய்தார் - வரலாற்றுச் சாசனம்) வைத்துப் பார்க்கும் போது வெல்கம் விகாரை தமிழ் பௌத்த துறவிகளால் நிர்மானிக்கப்பட்டு , நிர்வக்கப்பட்டு வந்திருக்கவேண்டும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

திரு.த.ஜீவராஜ் உசாத்துணைகள்
வரலாற்றுத் திருகோணமலை - கனகசபாபதி சரவணபவன்.
திருக்கோணமலை மாவட்ட திருத்தலங்கள் - பண்டிதர் இ.வடிவேல்.
கட்டுரை- "இலங்கையில் கிடைத்த தமிழ் சாசனத்தில் முதன் முதலாக திருப்பள்ளியெழுச்சியென்ற சொல்" - பேரசிரியர் சி. பத்மநாதன்.
கட்டுரை - "கிழக்கிலங்கையில் சீரழிந்துகொண்டிருக்கும் தமிழரின் தொன்மைச் சான்றுகள்"
தகவல் திரட்டுவதில் உதவியவர்கள் - கந்தளாய் சிவன்ஆலயக்குருக்கள், திரு.க.ரவிராஜன் (திருப்பணிச்சபை சிவன் ஆலயம்)



(இன்னும் நடுவோம்)

கா. செந்தூரன்

சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்
குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்
1929

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் உலக வலம்

## வெனிசுவெலா சனாதிபதியின் உடல் நிரந்தரப் பார்வைக்கு

அண்மையில் உயிர்நீத்த வெனிசுவெலா நாட்டின் சனாதிபதி சாவேஸ் அவர்களின் புகழுடல் மரணச் சடங்குகளின் பின் பதப்படுத்தப்பட்டு மக்களின் நிரந்தரப் பார்வைக்காக வைக்கப்படும் என அந்நாட்டின் துணை சனாதிபதி நிக்கோலஸ் மதுரோ தெரிவித்துள்ளார்.

அரச மரணச் சடங்கின் பின் அவரது உடலைக் கண்ணாடிப் பெட்டியிலிட்டு பாதுகாக்கும் முடிவை மேற்கொண்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் கம்யூனிச சோசலிசத் தலைவர்களான லெனின் ஸ்டாலின் மற்றும் மாஓ சேதுங் போன்றோரது உடல்கள் பாதுகாக்கப்படுவது போலவே இவரது உடலமும் பாதுகாக்கப்பட வேண்டும் என அவர் மேலும் கூறினார்.



## சிரச் சேதத் தண்டனையை சவூதி கைவிட வாய்ப்பு

சவூதி அரேபியாவில் குற்றவாளிகளுக்கு பொது இடத்தில் தலையை வெட்டி மரணதண்டனை வழங்கும் நடைமுறையை கைவிடும் பொருட்டு அந்நாட்டின் முக்கிய அமைச்சர்கள் பலர் மேலும் பொது இடத்தில் தலையை வெட்டி படுகொலைசெய்வதற்கு பதிலாக துப்பாக்கியால் சுட்டு தண்டனை நிறைவேற்றும் நடைமுறையை சவுதி அமுல்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அல்லது விஷ ஊசி ஏற்றி தண்டனை நிறைவேற்றும்படி சவூதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பிலான ஆலோசனையில் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது இது தொடர்பில் உத்தியோகபூர்வ தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை. சவுதியில் கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்ற குற்றச்சாட்டுக்களுக்கு மரண தண்டவை நிறைவேற்றப்பட்டு வருகின்றது. மேலும் சவுதியில் மட்டுமே பொது இடத்தில் வைத்து தலையை வெட்டும் மரண தண்டனை நிறைவேற்றப்படுகின்றது குறிப்பிடத்தக்கது.



### – தடைகள் விதிப்போம் –

## பாகிஸ்தானை எச்சரிக்கும் அமெரிக்கா

ஈரான் - பாகிஸ்தான் எரிவாயு குழாய் இணைப்பு திட்டம் குறித்து நாங்கள் மிகவும் கவலை அடைந்து உள்ளோம். இது குறித்து எமது கவலைகளை பாகிஸ்தானிடம் தெளிவுபடுத்தியுள்ளோம். பாகிஸ்தானுக்கு தேவைப்படும் மாற்று ஆற்றல் திட்டங்கள் அளிப்பது குறித்து, பாகிஸ்தானுக்கு உறுதியளித்துள்ளோம்.

இதற்கு முன்பு 10, 15 முறை இதுபோன்று திட்டங்கள் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. எனவே என்ன நடக்கப்போகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். மீறி இந்த ஒப்பந்தம் இந்த நேரத்தில் நிறைவேற்றப்படுமானால், பாகிஸ்தான் தவறான வழிகளில் செல்ல அறிவுறுத்தப்படும். எனவே பாகிஸ்தான் பொருளாதாரத் தடைகளை சந்திக்க நேரிடும் என்று அமெரிக்க செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நூலாந்து தெரிவித்துள்ளார்



## சாவேசின் தாயாரை கட்டித் தழுவிய மஹ்மூத் நிஜாத்

சாவேஸின் தாயார் எலினா ப்ரயஸ் டீ சாவிஸை நிஜாத் கட்டித் தழுவிய படங்கள் வெளியாகி ஈரானில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஈரானின் பழமைவாதக் கட்சிகள் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளதுடன் அவரது நடவடிக்கை இஸ்லாத்திற்கு முரணானதென தங்களது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

மேலும் நிஜாத் தனது கட்டுப்பாட்டை இழந்து விட்டதாகவும், எந்தவொரு தருணத்திலும் உறவினர் அல்லாத பெண்ணொருவருடன் இவ்வாறு நடந்துகொள்வது முறையல்லவெனவும் ஈரானைச் சேர்ந்த மதத்தலைவர்களில் ஒருவரான மொஹமட் தாகி- ராபர் தெரிவித்துள்ளார்



## ஆயிரக்கணக்கான பன்றிகள் சீன அருவியில்

சுமார் ஆராயிரத்திற்கும் மேற்பட்ட பன்றிகள் சீன அருவியான ஹுவாங்பூ அருவியில் மரணமாகி மிதந்து வந்தது தொடர்பாக சீன அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அப்பன்றிகளின் காதுகளில் கட்டப்பட்டுள்ள தகவல் சீட்டுக்களில் இருந்து விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. இப்பன்றிகள் இறந்து மிதந்த ஆற்றின் நீரைப் பரிசோதித்தபோது இந்த நீரில் பன்றிகளைக் கொல்லும் வைரஸ் காணப்பட்டதாக சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் எனினும் இவ் வைரஸ் மக்களிடையே பரவக்கூடியதல்ல என்பதும் தெரியவந்துள்ளது.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 07

பிரதீபா

1. மழை பெய்தால் வெப்பம் குறையும் இப்போது மழை பெய்யவில்லை எனவே
    1. வெப்பம் மாறாதிருக்கும் 2. வெப்பம் அதிகரிக்கும்
    3. வெப்பம் குறையும்

**பின்வரும் பாடலை வாசித்து 2ம், 3ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈர்ந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர்.

2. பாடலில் நல்லார் எனக் குறிப்பிடப்படுபவர்கள் யார்?
    1. மிகவும் வறுமையில் வாடும் ஒருவர்.
    2. நற்குணங்கள் உடைய ஒருவர்
    3. பிறருக்கு உதவி செய்யும் ஒருவர்
3. இப்பாடலில் வரும் 'கல்மேல் எழுத்துப்போல்' என்ற தொடரின் கருத்து யாது?
    1. கல்லில் செதுக்கப்பட்ட எழுத்து
    2. என்றும் அழியாது நிலைத்திருக்கும்
    3. கல்லின் மேல் எழுதுவதைக் குறிக்கும்.
4. வரண்ட காலங்களில் அதிக தாகம் ஏற்படும். ஒருவருக்கு அதிக தாகம் ஏற்படுகிறது எனில்,
    1. அது வரண்ட காலமாக இருக்கலாம்
    2. நீரிழிவு நோயாக இருக்கலாம்
    3. அது மழைக்காலமாக இருக்கலாம்
5. தமிழ், சிங்கள புத்தாண்டு ஏப்ரல் மாதம் 13ம், 14ம் திகதிகளில் பிறக்கும்.
    1. இது பெரும்பாலும் நிகழும் நிகழ்வாகும்
    2. இது எப்போதும் நிகழும் நிகழ்வாகும்
    3. இது சிலவேளை நிகழும் நிகழ்வாகும்
6. இலைகளில் பாலைக் கொண்டிருக்கும் தாவரம் எது?
    1. மொசுமொசுக்கை 2. நாயுண்ணி 3. வேலிப்பருத்தி
7. கிராமப் புறங்களில் உணவு உண்பதற்காக பயன்படுத்தும் இலை யாது?
    1. தாமரை 2. அல்லி 3. வட்டக்கண்ணி
8. இலைகளைக் கொண்டிராத தாவரம் எது?
    1. கற்றாளை 2. மணிவாழை 3. சதுரக்கள்ளி
9. நீரின் மூலம் பரம்பலடையும் பழம் எது?
    1. ஓட்டொட்டி 2. புலிநகம் 3. தேங்காய்
10. வித்துக்களைக் கொண்டிராத பழம் எது?
    1. ரம்புட்டான் 2. அன்னாசி 3. பியர்ஸ்
11. பூச்சிகளில் தங்கி வாழும் தாவரம் எது?
    1. ஆகாயத்தாமரை 2. கெண்டித் தாவரம் 3. பூச்சாடித் தாவரம்
12. ஒரேயொரு தடவை பூத்துக் காய்த்த பின் மடிந்துவிடும் தாவரம் எது?
    1. பப்பாசி 2. சேம்பு 3. வாழை
13. விரைவாக முளைக்கும் வித்து வகை எது?
    1. கடுகு 2. இராணி அவரை 3. றம்புட்டான்
14. மெல்லும் இனிப்பு (சுவிங்கம்) தயாரிக்கப் பயன்படும் பப்பையினை பெறும் தாவரம் எது? 1. இறப்பர் 2. கொக்கோ 3. பப்பாசி
15. நள்ளிரவில் பூக்கும் தாவரம் எது?
    1. மல்லிகை 2. ஓர்க்கிற் 3. தாழை
16. விலங்குகள் விரும்பியுண்ணாத தாவரம் எது?
    1. சோளம் 2. கள்ளி வகை3. பால் அறுகு
17. தங்கையிடம் இருந்த பணத்தை விட ரூபா 80 குறைவாக அண்ணனிடம் இருந்தது. இருவரிடமும் இருந்த மொத்தப் பணம் ரூபா 400 எனின், அண்ணனிடம் இருந்த பணம் எவ்வளவு?
    1. ரூபா 240 2. ரூபா 160 3. ரூபா 120
18. கடிகாரத்தின் நேரம் 6 மணியை அடையும் போது நிமிட முள் வடமேற்குத் திசையில் அமைந்திருக்குமாயின் மணி முள் எத்திசையைக் காட்டும்?
    1. தென் மேற்கு 2. தென்கிழக்கு 3. தெற்கு
19. ஒரு பெரிய பெட்டியினுள் 6 சிறிய பெட்டிகள் இருந்தன. அவ் ஆறு சிறிய பெட்டிகள் ஒவ்வொன்றினுள்ளும் இன்னும் சிறிய ஆறு பெட்டிகள் இருந்தன. ஆகவே அங்கிருந்த மொத்த பெட்டிகளின் எண்ணிக்கை யாது?
    1. 37 2. 43 3. 42
20. ஓலைப் பெட்டி ஒன்றில் 100 முட்டைகள் இருந்தன. அப்பெட்டியிலிருந்த முட்டைகளின் எண்ணிக்கையின் இரு மடங்கிலும் 9 முட்டைகள் குறைவாக காட்போட் பெட்டி ஒன்றில் இருந்தன எனின், இரு பெட்டிகளிலும் இருந்த முட்டைகள் எத்தனை? 1. 291 2. 300 3.191
21. வாடகை மோட்டார் கார் முதலாவது கிலோ மீற்றருக்கு ரூபா 7 ஐயும் அதன் பின்னர் ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் ரூபா 5 வீதமும் அறவிடும். எனில் 10கி.மீ செல்வதற்கு அறவிடப்படும் பணம் எவ்வளவு?
    1. ரூபா 50 2. ரூபா 52 3. ரூபா 25

பெயர்: ..............................................................
..............................................................
முகவரி: ..............................................................
..............................................................
..............................................................
பாடசாலை: ..............................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல்முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவாவில் மேலெழும் ஈழ மனித உரிமைகள்

## மார்ச் 2012 இலிருந்து மார்ச் 2013 நோக்கி...

கடந்த வாரம் ஐநாவின் மனிதவுரிமைச் சபையின் முன் மொழிவுகளை இலங்கை ஏற்க மறுத்தால் அதற்கு அப்பால் சர்வதேசச் சமூகத்தின் நடவடிக்கைகளாக முன்மொழிவுகளை இலங்கை மீது திணிப்பதற்காக அம்முன்மொழிவுகளை ஐநாவின் பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு சென்று அங்கீகாரம் பெறுதல் என்பதையும் பாதுகாப்புச் சபையில் சீனா மற்றும் ரஸ்யாவின் வீட்டோ அதிகாரங்களால் அமெரிக்க முன்மொழிவுகள் தோல்வியடையும் பட்சத்தில் அடுத்த நடவடிக்கையாக தனித்தனி நாடுகள் இலங்கையின் மீது நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரலாம் என்பதையும் பார்த்தோம்.

அவ்வாறு தனித்தனி நாடுகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரும் போது அங்கு கருத்திற் கொள்ளப்படும் காரணியாக தர்மம் இருக்குமா? என்றால் இல்லை என்பதே அதன் பதிலாய் அமையும். தனித்தனி நாடுகளின் பூகோள அரசியல் நிலைமையும் இலங்கையுடனான பொருளாதார நன்மைகளுமே அங்கு தாக்கம் செலுத்துமேயொழிய கொல்லப்பட்ட மக்களும், புதைக்கப்பட்ட நியாயங்களும், மறக்கடிக்கப்பட்ட தமிழர் வரலாறும் அல்ல என்பதே உண்மையாகும்.

இக்கணத்தில் அண்மையில் நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதம மந்திரி திரு. உருத்திரகுமாரன் அவர்கள் ஆனந்தவிகடன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியின் பதில்களை மேற்கோளாகக் கொள்ளலாம். அப் பதில்களில் முக்கியமாக உலக நாடுகள் இலங்கையில் நிகழ்ந்த படுகொலைகளை தற்போதுவரை ஏன் இனஅழிப்பாகக் கொள்ளவில்லை என்பதற்கு " நிகழ்ந்தது உண்மையில் இன அழிப்பேதான். ஆனால் இந்த உண்மையினை உணர்ந்திருந்தும் அதனை ஏற்றுக் கொள்வதால் ஏற்படக்கூடிய அரசியல் விளைவுகள் காரணமாக அல்லது இலங்கை தொடர்பாக ஏற்படும் வர்த்தக இழப்புக்கள் காரணமாக இதனை ஏற்றுக் கொள்வதில் அனைத்துலக அரசுகளிடமும் தயக்கம் இருக்கின்றது" என்ற பதிலிலிருந்து அனைத்துலகச் சமூகத்தின் முடிவுகள் என்பவை தர்மம் சார்ந்தவை அல்ல என்பதையும் அவர்களின் முடிவுகள் முழுமையாக அந்நாட்டினது பூகோள அரசியல் நிலைமையையும் பொருளாதார நலன்களையுமே அடிப்படையாகக் கொண்டவை என்பது புலனாகின்றது.

எனவே இங்கு பாதகாப்புச் சபையையும் தாண்டி நடவடிக்கை எடுக்க முனைகின்ற நாடுகள் தத்தமது நலன்களைக் கருத்திற்கொள்ளவே முனையும்.

இவ்வாறானதொரு நிலை, அதாவது தனித்தனி நாடுகள், இலங்கை மீது நடவடிக்கைகளை மேற்கொள்ள முனையும் பட்சத்தில் இந்தியாவின் நிலைதான் முதன் முதலில் திரிசங்கு சொர்க்கத்தின் நிலைக்குச் சென்று விடும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியா இலங்கையின் நட்பு நாடு என்பதையே எப்போதுமெ வலியுறுத்தி வருவதன் நோக்கம் என்ன என்பதை நாம் ஆராய வேண்டிய அவசியமில்லை. அது வெள்ளிடை மலையாக அனைவருக்கும் தெரிந்த விடமயமே. ஆனால் உலக நாடுகள் இலங்கைக்கு எதிராகத் தனித்தனி நடவடிக்கை என்னும் கோதாவில் குதிக்கும் போது இந்தியா என்ன செய்யப் போகின்றது என்பதே இங்கு ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

இந்தியா தனிப்பட்ட முறையில் இலங்கையின் மீது நடவடிக்கை எடுக்குமா? என்பதனைத் தீர்மானிக்கும் முதற் காரணியாக ஆசியப் பூகோளச் அரசியற் செல்வாக்கு முதன்மை பெறுகின்றது.

சீனாவின் பொருளாதார, அரசியல் மற்றும் உறுதியான வெளிவிவகாரக் கொள்கைகளால் ஆசியக் கண்டத்தில் இந்திய அரசியற் செல்வாக்கு சரிவை எதிர்கொள்கின்றது என்பதை வெளிப்படையாகத் தெரிந்து கொள்ளலாம். இதனை நான் ஏற்கனவே தனியானதொரு கட்டுரையில் (கையறு நிலையில் இந்திய வெளியுறவுக் கொள்ளை) விரிவாக மலைமுரசின் ஊடாகப் பேசியுள்ளேன். அங்கு பேசிய சிறிய உதாரணத்தை மீண்டும் தருவதால் ஆசியாவில் இந்தியச் செல்வாக்கை ஒரு முறை மீட்டிப் பார்க்கலாம். கடலால் அழிவடைந்து வரும் மாலைதீவு தனக்கான இந்திய உயர்ஸ்தானிகரை "கள்வன்" என விழித்திருந்ததுடன் இந்தியாவுடனான பொருளாதார ஒப்பந்தங்கள் சிலவற்றை தன்னிச்சையாக கைவிட்டிருந்ததை அங்கு பேசியிருந்தேன். ஆனால் அதனையும் விட மிகச் சேறுபூசும் விடயமாக கடந்த வாரம் நிகழ்ந்தது இந்திய ஸ்தானிகராலயத்தில் தஞ்சமடைந்திருந்த மாலைதீவின் முன்னால் சனாதிபதியை கைது செய்ய மாட்டோம் என அவ்வரசு இந்திய அரசிற்கு அளித்த வாக்குறுதியை நம்பி அம் முன்னால் சனாதிபதி ஸ்தானிகராலயத்தை விட்டு வெளியேறியவுடன் மாலைதீவு அரசு கைது செய்துள்ளமை ஆகும்.

எனவே சரிந்து வரும் தனது ஆசியப் பிரதேசச் செல்வாக்கை மேலும் சரியாமல் காப்பாற்ற முயற்சிக்கும் இந்திய அரசு இலங்கையின் மீது ஏனைய நாடுகள் தனித்தனியாக நடவடிக்கை எடுக்க முயற்சிக்கும் போது தான் நடவடிக்கை எடுப்பதா இல்லையா என்பதில் தள்ளாட வேண்டிய நிலையை எதிர்கொள்ளும். ஏனைய நாடுகள் நடவடிக்கை எடுக்கும் போது இந்தியா நடவடிக்கை எடுக்காது விட்டால் இந்தியா தனது தார்மீகக் கோட்பாடான "காந்தீயக்" கொள்கையிலிருந்து வழுக்கிவிடும் நிலையை எதிர் கொள்வதுடன் நடவடிக்கை எடுக்கும் ஏனைய நாடுகளுடனான உறவிலும் விரிசல் நிலையினை எதிர்கொள்ள வேண்டியேற்படும்.

இலங்கை மீது இந்தியா நடவடிக்கை எடுத்தால் இலங்கையுடனான தனது நட்பு நாடு என்னும் உறிவினை முறித்துக் கொள்ள வேண்டி ஏற்பட்டுவிடும். அத்துடன் வருடாந்தம் பல பில்லியன் இந்திய ரூபாய்களுக்கு மேற்கொள்ளப்படும் வர்த்தகத்தையும் இழக்க வேண்டி ஏற்படுவதுடன் இலங்கையின் சம்பூர் பிரதேசத்தில் உருவாகவுள்ள பொருளாதார வலயத்தில் தனது முதலீடுகளை இழக்க வேண்டிய நிலைக்கும் தள்ளப்படும்.

மாறாக இலங்கை மீது நடவடிக்கையினை இந்தியா மேற்கொள்ளும் போது ஆசிய வலைப்பின்னலில் சீனா இந்தியாவைச் சுற்றி உள்ள நாடுகளுடனான தனது தொடர்பை அதிகரித்து வரும் திட்டத்திற்கு ( இத்திட்டத்தினை ஆசிய முத்துமாலைத் திட்டம் என ஆய்வுகளில் பேசப்படுவதைக் காணலாம்) மேலும் வலுச் சேர்த்துவிடும் என்பதும் கருத்திற் கொள்ளத் தக்கதே.

எனவே இலங்கை மீது தனித்தனி நாடுகள் நடவடிக்கையினை மேற்கொள்வதென்பதை இந்தியா தனது நலன்களின் அடிப்படையில் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்பதே உண்மை.

அதனடிப்படையில் இப்போதே இந்தியக் காய் நகர்த்தல்கள் தொடங்கி விட்டன.

அமெரிக்கா கொண்டுவரவுள்ள குற்றப் பிரேரணையின் வலுவைக் குறைக்கும் முயற்சிகளை இந்தியா இராசதந்திர முறையில் ஆரம்பித் துள்ளது. அதற்காகவே தற்போது வரை வெளிப்படையாக அமெரிக்கப் பிரேரணையை இந்தியா ஆதரிக்குமா அல்லது எதிர்க்குமா என்பதை வெளியிடாமலுள்ளது. இந்தியா இப் பிரேரணையை எதிர்க்குமாயின் அப்பிரேரணையின் உள்ளார்ந்த பெறுமதி குறைந்துவிடும் என்பதை அமெரிக்காவும் உணர்ந்துள்ளது. எனவே மிகவலிதான குற்றச்சாட்டுக்களைக் கொண்டமையாத பிரேரணையைப் பற்றிய சிந்தனையை அமெரிக்கா மீது இந்தியா திணிக்க முற்பட்டுள்ளது.

அடுத்த படியாக இலங்கையை அமெரிக்காவுடன் தனிப்பட்ட முறையில் பேசும்படி இந்தியா வெளிப் படையாகவே அறிவித்தல் விட்டுள்ளது. அதனை நிகழ்த்துவதற்கான அடிப்படைத் தொடர்புகளை உருவாக்கவே இந்தியாவின் சுப்ரமணிய சுவாமியின் இலங்கை வருகையை இலங்கை-இந்தியா-அமெரிக்கா இடையிலான இரகசியத் தூதுவர் வருகையாகவே சில அரசியல் நோக்கர்களால் கருதப்பட்டுள்ளது.

அடுத்து பொதுநலவாயத் தலைவர்களின் கொழும்பு மகாநாட்டைப் புறக்கணிப்பதா இல்லையா என்ற வாதப் பிரதிவாதங்கள் நாடுகளுக்கிடையே நடந்து வரும் வேளையில் பொதுநலவாயச் செயலகம் இந்திய ஆதரவுடன் இலங்கையில்தான் இம் மகாநாடு நடைபெறும் என்ற உறுதியான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அடுத்து தமிழ்நாட்டில் உருவாகியுள்ள எதிர்ப்பலைகளை ஒன்று குவிய விடாமல் தடுக்கும் செயற்பாட்டிலும் இந்திய அரசு ஈடுபட்டிருப்பதைக் காணலாம். போராட்டங்களைத் தனித்தனியாக நடத்தும் வகையில் தந்திரோபாய நகர்வுகளை மேற்கொண்டுள்ள இந்திய அரசு அப் போராட்டங்களுக்கு அரசியல் சாயங்களைப் பூசி அரசியற் கட்சிகளிடையே ஏற்கனவேயுள்ள பிளவுகள் ஊடாக போராட்டங்களை ஒன்று திரள விடாமல் தடுத்துவருவதைக் காணலாம்.

எனவே ஐநாவின் மனிதவுரிமைச் சபையில் கொண்டுவரப்படவுள்ள, தற்போதுவரை வெளிவராத, அமெரிக்க முன் மொழிவுகள் வெற்றிபெற்றாலும் ஈழத் தமிழரின் வாழ்வியலில் உடனடி மாற்றங்கள் எதனையும் எதிர்பார்க்க முடியாது. அத் தீர்மானம் கால, தேச, வர்த்தமானங்களை பெறுதல் என்பது பல படிகளைத் தாண்டிய பின்னரே நிகழும். அது இலங்கை அரசிற்கும் தெரியும்.

-மாயன்-

## மகளிர் தினத்தை முன்னிட்டு - ஈரானியக் கவிதையொன்று

நான் ஒரு தாய்
நான் ஒரு சகோதரி
நம்பிக்கையான மனைவி
நானும் பெண் தான்

விழித்த நாள் முதலாய்
வெறுங்கால்களோடு
இந்தச் சுடுபாலையில்
சுமையோடு ஓடியவள்

ஈரானின் வடபுறத்தில்
ஒரு குக் கிராமத்தில்
விபரந்தெரிய முன்பிருந்தே
வேலை செய்து வந்தவள்

நெல்வயலில்
தேயிலைத் தோட்ட சரிவில்
அடிமாட்டோடு மாடாய்
காலை முதல் கருக்கல்வரை
துன்பத்தில் தோய்ந்து தோய்ந்து
தேய்ந்து வருபவள்

மலைச்சரிவில்
பிள்ளைகளைப் பெற்றேன்
சம வெளியில்
ஆடுகளைத் தொலைத்தேன்
இன்னும் அழுது கொண்டிருக்கிறேன்

உங்கள் வெட்கங்கெட்ட
அகராதியில்
என்னைப் போன்ற
பெண்ணைக் குறிக்க
சொல்லேயில்லை

மதர்த்த மேனியும்
திமிர்த்த தனங்களும்கொண்டவளின்
பட்டுவண்ணத் தோலுக்கும்
பரிமளிக்கும் கூந்தலுக்கும்
மட்டுமே
உங்கள் அகராதியில்
பெண் என்பது பெயர்

என் தோலோ இந்தப் பாலைவனத்தின்
வெறுமையின்
எச்சம்

என் அடர்ந்த தலைமுடியோ
ஆலைப்புகை
கை நிறைய எனக்கு
காய்ப்புக்கள். காயங்கள்.

நானும் ஒரு பெண்
உங்கள் வெட்கங்கெட்ட அகராதியில்
என்னைக் குறிக்க
ஒரு சொல்லே இல்லை

உங்கள் கண்ணுக்குத் தெரிவது
என்
மார்பகம் மட்டுமே
அதன் உள்ளே
இதயம் ஒன்று
அழுது கொண்டிருக்கின்றதே
அறிவீரா

துயரங்களையே
சுமந்து பழகிய நான்
இப்போது
சுமக்கப் பழகிக் கொண்டேன்
துப்பாக்கியை.

மார்ஜியா அகமது ஊஸ்தயி
ஈரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேற்கு எதிர் கிழக்கு..

அரையிறுதிப் போட்டியில் நுவரெலியா டிக்கோயாப் பாடசாலையொன்றை வெற்றிகொண்ட புனித மரியாள் கல்லூரி தற்போது இறுதிச் சுற்றில் கொழும்பு றோயல் கல்லூரியை எதிர்கொள்ளவுள்ளது. ஏற்கனவே அரையிறுதிப் போட்டியில் வென்றதன் ஊடாக ரூபா இறுநூற்றைம்பது ஆயிரங்களை (ரூ. 250000) புனித மரியாள் கல்லூரி பெற்றுக்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ் வெற்றிவாகையைச் சூடிய மாணவிகள் ச. தாட்சாயிணி, ம. நிதர்சினி, க. மாதுமை, ர. பானுஜா ஆகியோராவர்.

நான்கு சுற்றுக்களைக் கொண்ட இறுதிப்போட்டியனது இம்மாதம் 30ம் திகதி நடைபெறவுள்ளதுடன் அதனை நேரலை ஒளிபரப்பாக கண்டுகளிக்கவும் முடியும்

## தரம் குறைந்த எரிபொருள்..

சங்கம் தெரிவித்திருந்த குற்றச்சாட்டை இந்தியன் ஒயில் கூட்டுத்தாபனம் நிராகரித்துள்ளது.

கடந்த வாரம் வெளியான இக்குற்றச்சாட்டைத் தொடர்ந்து லங்கா. ஐ.ஓ.சி யின் பெற்றோல் தரமற்றது எனும் வதந்தி பாவனையாளரிடையே பரவியிருந்தது.

இதனைத் தொடர்ந்து லங்கா ஐ.ஓ.சி மறுப்பறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. இம் மறுப்பறிக்கையில் இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளின் தரம் பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவ் எரிபொருள் பாவனைக்கு விநியோகிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

இவ் எரிபொருளின் தரம் குறித்துப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் பரிசோதனை நடாத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொடர் தாக்குதல்..

செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த 12ம் திகதி இரவு குருஷேஸ்த்ரா கல்வி நிலைய உவர்மலைப் பிரிவின் கட்டிடத் தொகுதிக்குள் நுழைந்த விசமிகள் அக் கல்வி நிறுவனப் பெயர்ப்பலகைகளை நாசம் செய்திருந்ததுடன் ஆசிரியர் விபரங்களையும் வர்ணம் பூசி அழித்திருந்தனர்.


பின்னர் மற்றொரு முறை அங்கு பூட்டப்பட்டிருந்த மின் விளக்குகள் சேதமாக்கப்பட்டும் உள்ளன. இவ் விடயம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கும் முனைப்புக்களை கல்வி நிறுவன நிர்வாகம் மேற்கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடித்தவர்கள் கைது

புல்மோட்டைக் கடற்பரப்பில் சட்டவிரோத வகைகளில் மீன்பிடியை மேற்கொண்ட ஆறு மீனவர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இவர்கள் கடலில் வெளிச்சம் பாய்ச்சி மீன் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர். இவர்களிடமிருந்த ஆறு இழைநார் படகுகளையும் ஆறு மின்பிறப்பாக்கிகளையும் நாற்பது மீற்றர் வயர்களையும் பதினைந்து சக்தி வாய்ந்த மின்குமிழ்களையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

புல்மோட்டையின் அரிசிமலைப்-





பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட இவர்கள் புல்மோட்டைக் காவல்-துறையினரிடம் மேலதிக விசாரணை-களுக்காக ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

## தெரிவானார் 266வது போப்..

தேர்வுக்காக ஒன்றுகூடிய கர்தினால்களின் முதலாவது முயற்சி தோல்வியில் முடிவடைந்ததைத் தொடர்ந்து இரண்டாவது தெரிவின் போதே போப் பிரான்சிஸ் தெரிவானார்.

தேர்வின் பின் போப்பாண்டவருக்கு உரிய வெந்நிற உடையில் புனித பீற்றர் சதுக்க முன்றலிற்கு வருகை தந்த போப்பாண்டவர் அங்கு கூடியிருந்த மக்களை நோக்கி

"எனக்காக பிரார்த்தியுங்கள்"

என வேண்டுகோள் விடுத்தார். சுமார் ஆயிரத்து முந்நூறு வருடங்களின் பின் ஐரோப்பியரல்லாத ஒருவர் போப்பாண்டவராக தேர்வாகியுள்ளதுடன் இவரே முதலாவது இலத்தீன் அமெரிக்கப் போப்பாண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சிகையலங்காரப் பெரியவர் சிறுமியுடன் சில்மிசம்

சுமார் ஐம்பத்து மூன்று வயது மதிக்கத்தக்க சிகையலங்கார நிலையப் பெரியவர் ஒருவர் முடிதிருத்த வந்த சிறுமியுடன் தகாத உறவுக்கு முயற்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு விளக்க மறியலிடப்பட்டுள்ளார்.

மூன்றாம் கட்டைச் சந்தியில் சிகை திருத்தும் நிலையமொன்றை நடாத்தி வரும் முதியவரே இக்குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாகப் பல தவறான செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் சிறுமி வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகவில்லை என்பதும் தெளிவாகியுள்ளது. சில்மிசம் செய்த பெரியவர் ஊரவர்களால் நையப்புடைக்கப்பட்டு காவல்துறையிடம் கையளிக்கப்பட்டிருந்தார்.

## சவூதியில் எழுவர் சிரச்சேதம் செய்யப்பட்டுள்ளனர்

ஆயுத முனையில் கொள்ளையடித்தனர் என்ற குற்றத்தை சவூதியின் நீதிமன்று நிரூபணம் செய்ததால் ஏழு சவூதியர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டதாக அந்நாட்டு அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அவர்களது குடும்பங்களும் மனித உரிமை அமைப்புக்களும் அவர்களை மன்னிக்கும்படி சவூதி அரசிடம் மன்றாடிக்கொண்டிருக்கும் வேளையில் அவர்களது சிரச்கொய்தல் நடவடிக்கை நிகழந்தேறியுள்ளது.

## றிசானாவின் சிரச் சேதத்தால்..

கையாண்டது மட்டுமின்றி இச் சிரச்சேதத்திற்கான முழுப்பொறுப்பையும் சவூதி அரசே பொறுப்பேற்க வேண்டும் எனும் நிலைப்பாட்டினை உருவாக்க அமைச்சர் முயற்சித்ததாகவும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் என்ற பதவிநிலையில் எவ்வித பொறுப்புக்களையும் இக்கொலை தொடர்பாக ஏற்காமல் தட்டிக் கழித்ததாகவும் இக்குற்றச்சாட்டில் மேலும் கூறப்பட்டுள்ளது.

றிசானா சிரச்சேதம் செய்யப்பட்ட இரண்டு மணித்தியாலங்களுக்குப் பின்னர் அன்று கூடியிருந்த பாராளுமன்ற அமர்வுகளில் பேசிக்கொண்டிருந்த அமைச்சர் றிசானாவை நாட்டுக்குக் கொண்டு வர எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளில் முன்னேற்றங்கள் காணப்படுவதாக உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொரிய போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை தன்னிச்சையாகக் கைவிட்டது வடகொரியா

அறுபது வருடங்கள் வழமை வாய்ந்த கொரியப் போர்த்தவிர்ப்பு ஒப்பந்தத்தை தன்னிச்சையாக கைவிட்டு மேற்குழகிற்கும் தென்கொரியாவிற்கும் பேரிடியைக் கொடுத்துள்ளது வடகொரியா.

தென்கொரியாவும் அமெரிக்காவும் இணைந்து 11ம் திகதி போர்ப்பயிற்சி நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கும் வேளையில் இப்போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை வடகொரியா தன்னிச்சையாக கைவிட்டுள்ளதுடன் தென்கொரிய தீவான பியோங்யாங் மீது துடைத்தழிப்புத் தாக்குதலைத் தொடுக்கப் போவதாகவும் அறிவித்துள்ளது. அத்தாக்குதலுக்கான பயிற்சிகளையும் வடகொரியப் படையினர் ஆரம்பித்துள்ளனர்.

## சீனக்குடா வான்படைத் தளத்தில் – மகளிர் தின நிகழ்வு –

மகளிர் தினத்தை முன்னிட்டு சீனன்குடா வான்படைத்தளத்தில் கற்றறிதல் நிகழ்வொன்று நடந்தேறியுள்ளது.

சேவா வனிதாவின் வான் படைப் பிரிவின் ஏற்பாட்டில் நிகழ்ந்த இக்கற்றறிதல் நிகழ்வின் கருப்பொருளாக "பெற்றோர் மற்றும் திருமண உறவுகள்" தொடர்பான கல்வி நடவடிக்கை நடந்தேறியுள்ளது.

வான்படைத்தளத்தின் ஆண், பெண் அலுவலர்களும் ஆண் அலுவலர்களின் மனைவியரும் இக்கல்வி நடவடிக்கையில் இணைந்திருந்தனர்.

தொடர்ந்து மாலைநேர ஒன்றுகூடலும் அங்கு நடந்தேறியது.









## போதைப்பொருளுடன்..

நெய்தல் நகர் பிரதேசத்தில் உள்ள வீதியில் குழுவாக காணப்பட்ட இளைஞர்களிடமிருந்தே குறித்த ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## வெள்ளத்தால்..

இலவச பசளை விநியோகமும் உள்ளடக்கப்படும் எனத் தெரியவருகின்றது.

மாவட்டங்கள் தோறும் உள்ள விவசாய சேவை நிலையங்கள் ஊடாக அந்தந்த மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர்கள் தகவல்களைத் திரட்டும் பணிகளை ஆரம்பித்துள்ளனர். அத்துடன் பயிர்க் காப்புறுதித் திட்டத்தில் தமது பயிர்களைக் காப்புறுதி செய்திருந்த விவசாயிகளுக்கு முழு இழப்பையும் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இந்தியப் பெண் வன்புணர்வுச் சூத்திரதாரி தற்கொலை

இந்தியாவில் நிகழ்ந்து உலகையே உலுக்கிய மருத்துவக் கல்லூரி மாணவியின் வன்புணர்வுடன் தொடர்புடைய ஆறு சந்தேக நபர்களுள் முக்கிய சூத்திரதாரியான ராம்சிங் சிறையில் தனதுயிரைத் தானே மாய்த்துக் கொண்டுள்ளான்.

புதுடில்லியில் பிரபல்யமான திஹார் சிறையிலிடப்பட்டிருந்த இச் சந்தேக நபர் தனது உடைகளைக் கயிறாகத் திரித்து . அக்கயிற்றைக் கொண்டு தூக்கிலிட்டுத் தற்கொலை செய்துகொண்டதாக சிறைச்சாலை வட்டடாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் ராம்சிங்கின் குடும்பத்தினரும் அவரது சட்டவாளரும் ராம்சிங்கின் மரணம் சந்தேகத்திற்கிடமானது எனத் தெரிவித்துள்ளனர். எனினும் மரண விசாரணைகளை மேற்கொண்ட மருத்துவர்கள் ராம்சிங்கின் மரணம் தூக்கிற்-தொங்கியதாலேயே நிகழ்ந்துள்ளது என உறுதிப்படுத்தியுள்ளனர்.

## சவூதி நிதியுதவியில் தம்பலகாமம், கிண்ணியா வீதி திருத்தப்படவுள்ளது.

தம்பலகாமத்தையும் கிண்ணியாவையும் இணைக்கும் வீதியை சவூதியின் நிதியுதவியில் திருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தம்பலகாமத்திலிருந்து கிண்ணியாவிற்குச் செல்லும் தெரு கடும் சேதமடைந்த நிலையிலுள்ளது. இவ் வீதியை சூரங்கல் வரை திருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன் அதற்கான முன்னுணரப்பட்ட செலவீனமான சுமார் 9 பில்லியன் ரூபாய்களை சவூதி நிதியில் ஒதுக்கிக் கொள்ளவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## காஷ்மீர் தாக்குதலில் இந்தியப் படைகள் பலி

இந்தியக் கட்டுப்பாட்டு காஷ்மீர் பகுதியில், இரு போராளிகள் திடீரென நடாத்திய தாக்குதலில் ஐந்து இந்தியப் பரா இராணுவத்தினர் அவ்விடத்திலேயே மரணமாயுள்ளனர். மேலும் ஐந்து பராத்துருப்பினர் இத்தாக்குதலில் காயமடைந்தும் உள்ளனர். எதிர்த்தாக்குதலில் துப்பாக்கிதாரிகள் இருவரும் மரணமடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தெரிந்துகொள்ளுங்கள்

- வால்வெள்ளி பனியினாலும், தூசுகளினாலும் உருவாகிய வால் கொண்ட வான் பொருளாகும்.
- பார் ஹெடட் கூஸ் எனும் வாத்தினமே உலகில் மிகவும் உயரத்தில் பறக்கக்கூடிய பறவையாகும்.
- சிறுத்தைகள் மிகவும் வேகமாக செல்லக்கூடிய தரைவாழ் உயிரினமாகும். இவை ஓடுவதற்கு ஆரம்பித்த 2 செக்கனில் மணிக்கு 80கி.மீ இலிருந்து 110கி.மீ வேகத்தில் ஓடக் கூடியது. இவற்றின் பாதங்கள் ஓட்ட வீரர்களின் முள் சப்பாத்துக்களை ஒத்தவை.
- மண்டாரின் எனும் மொழியை 70 கோடி சீனர்கள் பேசுகின்றனர். இதுவே உலகில் அதிகம் பேசப்படும் மொழியாகும்.
- ஆங்கிலத்தில் எழுதப்பட்டு ஐரோப்பியக் கண்டத்தில் வெளியிடப்படும் சிறந்த இலக்கியப் புத்தகத்திற்கு வழங்கப்படும் பரிசே புக்கர் பரிசாகும் இதன் பரிசுத் தொகை . 20 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

## சேவல் கொண்ட செருக்கு

எங்கள் பக்கத்து வீட்டில் பல கோழிகள் உள்ளன. அவற்றுள் ஒன்று சேவல் ஏனையவை பேடுகள். மஞ்சள் நிறச் சொண்டும் சிவப்பு நிறக் கொண்டையும் வெண்மை நிற உடலும் கொண்டது அச்சேவல். அது நிமிர்ந்து நிற்கும் போது கம்பீரமாகவும் அழகாகவும் காட்சி தரும். இரவு வேளைகளில் அந்தச் சேவல் பேடுகளுடன் வேப்ப மரம் ஒன்றில் தங்கியிருக்கும்.

ஒரு நாள் அதிகாலையில் அந்தச் சேவல் எழுந்தது. தனது இரு சிறகுகளையும் அடித்துக் கூவியது. அது கூவியதைக் கேட்டதும் பல சேவல்கள் பல திசைகளிலிருந்தும் சிறகடித்துக் கூடின. தன்னைப் பின்பற்றியே ஏனைய சேவல்கள் எல்லாம் கூவுவதாக அது நினைத்துக் கொண்டது. மீண்டும் மீண்டும் அது கூவியது. என்ன ஆச்சரியம்! அது கூவிக்கொண்டிருந்த போது கிழக்குத் திசை வெளுத்தது. மெல்ல மெல்ல இருள் விலகிப் பொழுது புலர்ந்தது. சிறிது நேரத்தில் உலகெங்கும் மெல்லிய ஒளி பரவியது. பறவைகள் எல்லாம் குரல் எழுப்பிக்கொண்டு பறந்து சென்றன. கிழக்குத் திசையில் சூரியனின் ஒளிக்கதிர்கள் மெல்ல மெல்ல மேலெழுந்து வருவது போலிருந்தது. ஆம், சூரியன் உதிக்கத் தொடங்கினான்.

இதனைக் கண்டதும் சேவலுக்குப் பெரும் மகிழ்ச்சி உண்டானது. தான் கூவித்தான் பொழுது விடிந்தது என்று அது எண்ணிக்கொண்டது. தான் வுவாவிட்டால் பொழுது விடியாது.. சூரியன் உதிக்க மாட்டான்.. உலகம் இருண்டே இருக்கும் என்று அது செருக்குக் கொண்டது. மரத்தை விட்டுப் பெருங்கர்வத்துடன் இறங்கி வந்தது. கம்பீரமாக அங்குமிங்குமாக நடந்து திரிந்தது. தனது பெருமையை உலகுக்கு உணர்த்த வேண்டும் என்று ஆசை கொண்டது.


அவ்வேளையில் கிளிக்கூட்டம் ஒன்று பறந்து வந்தது. அவை கீ... கீ... கீ.. என்று சத்தமிட்ட வண்ணம் உணவுதேடின. அக்கிளிகளில் ஒன்று சேவலிடம் மெல்ல மெல்ல நடந்து வந்தது. சேவலை வைத்த கண் வாங்காது பார்த்தது. அதனைக் கண்ட சேவல் "என்ன பார்க்கிறாய்?" என்று மிடுக்காகக் கேட்டது. அதற்கு கிளி "சேவலாரே! உமது கம்பீரமான தோற்றம் என்னைப் பெரிதும் கவர்ந்து விட்டது அதனால் பார்க்கிறேன்" என்றது. உடனே சேவல் "அப்படியா! தோற்றத்தைக் கண்டு திகைக்கும் நீ என் செயலை அறிந்தால் ஏங்கிடுவாய்" என்றது. "என்ன செயலைச் செய்தீர்கள்?" ஏ்னறு கிளி ஆவலோடு வினவியது. உடனே சேவல் செருக்கோடு "நான் கூவித்தானே பொழுது விடிகிறது. நான் காலையில் கூவாவிட்டால் சூரியன் உதிப்பானா? இருள் நீங்குமா?" என்று கூறியது. அதைக் கேட்டதும் கிளி சிரித்தது. "ஏன் சிரிக்கிறாய்?" என்று சேவல் கோபத்தோடு கேட்டது. அதற்குக் கிளி "சேவலாரே! நீங்கள் கூவித்தான் பொழுது விடிகிறதா? நீங்கள் கூவாவிட்டாலும் பொழுது விடியும்.. சூரியனும் உதிப்பான்" என்று கூறிச் சிரித்தது. "எப்படி உதிப்பான்?" என்று சேவல் செருக்குடன் கேட்டது.

"உரிய நேரம் வந்தவுடன் சூரியன் உதிப்பான்.. இருளும் விலகும்" என்றது கிளி. "இல்லை இல்லை நான் கூவித்தான் சூரியன் உதிக்கிறான். சரி, நாளை அதிகாலையில் நான் கூவ மாட்டேன். பொழுது விடிகிறதா பார்" என்று ஆணவத்துடன் கூறியது சேவல். அதையுந்தான் பார்ப்போமே என்று கூறிய வண்ணம் கிளி பற்ந்து சென்றது.

மறுநாட் காலையில் அந்தச் சேவல் கூவவில்லை. கிழக்குத் திசையைப் பார்த்துக் கோண்டே இருந்தது. பாவம் பெரும் ஏமாற்றங் கண்ட சேவல் செருக்கடங்கியது. சொன்னபடி காலையில் கிளி சேவலிடம் வந்தது. அதைக்காணவே சேவலுக்கு வெட்கமாயிருந்தது. தலையைக் கீழே குனிந்து கொண்டது. தன் தோல்வியை ஒப்புக்கொண்டது.

*"தன் தகுதியறியாது*
*செருக்கடைதல் ஆகாது."*

ஆக்கம்: ரட்சிகா ஸ்ரீதர்
தரம் - 09
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி.




## சித்த மருத்துவ அழகுக் குறிப்புகள்..

♦ தேங்காய் எண்ணெயில் மஞ்சள்தூளை போட்டுக் குழைத்து உடம்பிற்கு தடவி, பயத்தமாவை தேய்த்துக் குளித்தால் தோல் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.

♦ முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க அடிக்கடி எலுமிச்சை சாற்றை தடவ வேண்டும். தினமும் இவ்வாறு செய்வதால் முடி வளர்ச்சி குறைந்து முகம் அழகு பெறும்.

♦ பருமனாக இருப்பவர்கள் எடையை குறைக்க தினமும் காலையில் ஒரு டம்ளர் வெதுவெதுப்பான வெந்நீரில் ஒரு மூடி எலுமிச்சை பழச்சாற்றை பிழிந்து அதனுடன் அரை ஸ்பூன் தேன் கலந்து சாப்பிட்டால் எடை குறையும்.

♦ நகங்களை வெட்டும் முன் எண்ணெயை தடவிவிட்டு, சிறிது நேரம் கழித்து நகத்தை வெட்டினால், விரும்பும் வடிவத்திலும், அழகாகவும் வெட்ட இயலும்.

♦ கூந்தலில் எண்ணெய் பசை அதிகமாக இருந்தால், கோழி முட்டையில் கொஞ்சம் சர்க்கரையை கலந்து தலையில் லேசாக தடவிக்கொண்டு பிறகு தலைக்கு ஊற்ற வேண்டும். இதனால் எண்ணெய் பசை நீங்கி முடி அழகு பெறும்.

♦ தேநீரில் வடிகட்டிய பின், மிஞ்சும் தேயிலைத் தூளில் எலுமிச்சை சாறை பிழிந்து, தலையில் தேய்த்துக் குளித்தால், தலைமுடி பளபளப்பாகும்.

♦ வேப்பிலை, புதினா, சிறிது மருதாணி மற்றும் குப்பைமேனி இலைகளை காயவைத்து, தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் சிறிது எடுத்து, பாலில் குழைத்து, முகத்தில் பூசி, 20 நிமிடம் ஊற வைத்து குளித்தால், முகம் வோடிக்குரு வராமல், வெளியில் கறுத்துப் போகாமல் இருக்கும்.

♦ இளம் சூடான ஒரு லிட்டர் நீரில், இரண்டு ஸ்பூன் உப்பைப் போட்டு, கண்களை கழுவினால் கண்கள்



பிரகாசமாக இருக்கும்.

♦ கை, கால் முட்டிகளில் கறுப்பு நிறம் அதிகமாக இருந்தால், தொடர்ந்து அந்த இடத்தில் எலுமிச்சம்பழ சாற்றை தேய்த்து சோப்பு போட்டு குளிக்க வேண்டும் நாளடைவில் கறுப்பு நிறம் போய் விடும். தோல் வறண்டும், சுருக்கமும் இருந்தால் ஆலிவ் ஆயிலைப் பூசி, சிறிது நேரம் ஊற வைத்து, சோப்பு போட்டு குளிக்க வேண்டும்.

♦ இரவு படுக்கும் முன், புதினா சாறு இரண்டு தேக்கரண்டி, அரை மூடி எலுமிச்சம்பழ சாறு ஆகியவற்றுடன் பயிற்றம்பருப்பு மாவை கலந்து முகத்தில் தடவிக் கொண்டு பத்து நிமிடம் ஊறிய பிறகு ஐஸ் ஒத்தடம் கொடுக்க முகம் சுத்தமாகும். பருவினால் ஏற்பட்ட தழும்பும் மறையும்.

♦ ஆப்பிள் பழத்தை சின்னச் சின்ன துண்டுகளாக வெட்டி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணைப் பசை குறையும்.

♦ முகத்தில் உள்ள முடிகளை அகற்ற, முட்டையின் வெள்ளை கரு, சர்க்கரை, சோளமாவு அனைத்தையும் ஒன்றாகக் கலந்து பசைபோல் ஆனதும் முகத்தில் தடவவும். காய்ந்தவுடன் மெதுவாக பிய்த்து எடுத்தால் முட்டையுடன் முடியும் எளிதில் வரும்.

## முருங்கைப் பிஞ்சு ரசம்



**தேவையானவை:** முருங்கைப் பிஞ்சு (நறுக்கியது) - ஒரு கப், துவரம்பருப்பு - கால் கப், தக்காளி - 2, மிளகு - சீரகத்தூள் - 2 டீஸ்பூன், மஞ்சள்தூள் - அரை டீஸ்பூன், கடுகு - ஒரு டீஸ்பூன், பெருங்காயத்தூள் - அரை டீஸ்பூன், கொத்தமல்லி, கறிவேப்பிலை - சிறிதளவு, எலுமிச்சைச் சாறு - 3 டீஸ்பூன், எண்ணெய் - ஒரு டீஸ்பூன், உப்பு - தேவையான அளவு.

**செய்முறை:**
துவரம்பருப்பு, தக்காளி, முருங்கைப் பிஞ்சு ஆகியவற்றுடன் மஞ்சள்தூள் சேர்த்து வேக வைத்துக் கொள்ளவும். இதில் தேவையான தண்ணீர் சேர்த்து, அடுப்பில் வைத்து, உப்பு, மிளகு - சீரகத்தூள் சேர்க்கவும். அடுப்பை மிதமான தீயில் எரிய விடவும். ஒரு கொதி வந்ததும் கீழே இறக்கி, எலுமிச்சைச் சாறு சேர்க்கவும். எண்ணெயில் கடுகு, பெருங்காயத்தூள் தாளித்துச் சேர்க்கவும். கொத்தமல்லி, கறிவேப்பிலை தூவி அலங்கரிக்கவும்.

## மாங்காய் ரசம்



**தேவையானவை:** மாங்காய் துருவல் - அரை கப், துவரம்பருப்பு, மிளகு - தலா 2 டீஸ்பூன், சீரகம் - ஒரு டீஸ்பூன், கொத்தமல்லி, கறிவேப்பிலை - சிறிதளவு, தக்காளி சாறு - கால் கப், கடுகு, பெருங்காயத்தூள் - தலா அரை டீஸ்பூன், எண்ணெய், உப்பு - தேவையான அளவு.

**செய்முறை:** துவரம்பருப்பு, மிளகு, சீரகம் ஆகியவற்றை மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும். மாங்காய் துருவலை சிறிதளவு தண்ணீர் விட்டு வேக வைத்துக் கொள்ளவும். ஆறியபிறகு மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும். இதனுடன் தக்காளி சாறு, உப்பு, அரைத்து வைத்திருக்கும் பொடி, பெருங்காயத்தூள் சேர்த்து, 2 நிமிடம் கொதிக்க வைத்து கீழே இறக்கவும். எண்ணெயில் கடுகு தாளித்துச் சேர்த்து கொத்தமல்லி, கறிவேப்பிலை தூவவும்.

## வெங்காய ரசம்

**தேவையானவை:** தனியா - 4 டீஸ்பூன், காய்ந்த மிளகாய் - 6, தேங்காய் துருவல் - 2 டீஸ்பூன், இஞ்சித் துருவல் - ஒரு டீஸ்பூன், பூண்டு - 4 பல், தக்காளி - 2, நறுக்கிய வெங்காயம் - கால் கப், புளித் தண்ணீர் - 2 கப், கறிவேப்பிலை - சிறிதளவு, கடுகு, எண்ணெய், உப்பு - தேவையான அளவு.

**செய்முறை:**
தனியா, காய்ந்த மிளகாய், தேங்காய் துருவல், இஞ்சித் துருவல், பூண்டு, தக்காளி, வெங்காயம் ஆகியவற்றை சிறிது நேரம் வதக்கி விழுதாக அரைக்கவும். இந்த விழுதுடன் புளித் தண்ணீர், உப்பு சேர்த்துக் கொதிக்கவிடவும் (தேவைப்பட்டால் இன்னும் சிறிதளவு தண்ணீர் சேர்க்கலாம்). எண்ணெயில் கடுகு தாளித்துச் சேர்த்து இறக்கவும். கறிவேப்பிலை தூவவும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times:

### புதுச்சட்டத்தை எதிர்த்து சுங்க அதிகாரிகள் வேலை நிறுத்த அச்சுறுத்தல்.

புதிய இரண்டு சுங்க வரிச் சட்ட இணைப்புக்களை அரசு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முற்பட்ட நிலையில் இச்செயற்பாடு சுங்க அதிகாரிகளை ஆத்திரமூட்டியுள்ளது. இதனால் அவர்கள் வேலைநிறுத்தத்தில் குதிக்கப் போவதாக அச்சுறுத்தியுள்ளனர். ஏனெனில் இவ்விரு புதிய சட்ட இணைப்புக்களாலும் பெரும் பெறுமதிகளில் இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வியாபாரிகள் நன்மையடைய வாய்ப்புள்ளது என்பதுடன் செலுத்த வேண்டிய சுங்கத் தீர்வையிலிருந்து கழன்று கொள்ளும் வாய்ப்பும் உள்ளது என்று சுங்க அதிகாரிகள் வாதிடுகின்றனர். சிரேஷ்ட சுங்கத்தீர்வை அதிகாரி ஒருவர் கூறுகையில் கொள்வனவுப் பெறுமதியைக் குறைத்துக்காட்டுதல் உட்பட வேறு வழிகளில் வரி ஏய்ப்புச் செய்ய முற்படும் இறக்குமதியாளர்களை இவ்விரு சட்டங்களும் ஊக்குவிப்பதாக இருக்கின்றது எனக் குறிப்பிட்டார். கடந்த வாரம் வெள்ளிக்கிழமை சுங்க அதிகாரிகள் மதியத்திலிருந்து மாலை வரை வேலைகளைச் செய்வதை தவிர்த்து முன்னெச்சரிக்கை வேலைநிறுத்தம் ஒன்றை நிகழ்த்தியிருந்தார்கள்.

### புதிய மத்தள விமான நிலையத்தில் மேலும் பல சலுகைகள்

மார்ச் மாதம் 18ந் திகதி திறக்கப்படவுள்ள மத்தளை விமான நிலையத்தின் ஊடாக பயணிக்க விரும்பும் பயணிகளுக்கு பெருமளவு கழிவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளதாக பொது விமானத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். இக்கழிவுப் பொதிகளை மத்தள விமானத் தளத்தினூடாக தம்ப தீபம், மக்கா போன்ற இடங்களுக்குப் பயணிக்கும் இறையாத்திரிகர்களுக்கும் மேற்காசிய நாடுகளுக்கு தொழில் நிமித்தம் பயணிக்கும் மக்களுக்கும் வழங்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### பாராளுமன்றத்தில் சிறுநீரக வியாதி தொடர்பாக உலக சுகாதார திணைக்களத்தின் அறிக்கை

வறட்சிப் பிரதேச விவசாயிகளை தாக்கிவரும் அசாதாரண சிறுநீரக வியாதி தொடர்பாக இலங்கை அரசுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுகாதார அமைப்பு மேற்கொண்ட ஆய்வுகளும் அவற்றின் முடிவுகளும் மந்திரிசபையிடம் கையளிக்கப்பட்டதாகவும் அம்முடிவுகள் உரிய நடவடிக்கைகளுக்காக உரியவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்ற முன்மொழிவுகள் கிடைத்தவுடன் அதனை மந்திரி சபை ஆராய்ந்த பின்னரே இவ்விடயங்கள் யாவும் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### வெளிநாட்டு இருப்புக்களை கபளீகரிக்கும் கடன் பெறுகைகள்.

இலங்கையின் வெளிநாட்டு இருப்புக்களாக காட்டப்படும் தொகையில் சுமார் 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் பணமாகக் காணப்படுவதால் அவை அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கையின் பெறுமதியினை மேலும் தளம்பலடையச் செய்யும் என பொருளாதார வல்லுணர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த வருடம் மார்ச் மாதத்தில் 121 ரூபாவாக இருந்த இலங்கையின் முக்கிய பரிமாற்றுப் பணமான அமெரிக்க டொலர் இவ்வருடம் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் 128 ரூபாவுக்குத் தளம்பியுள்ளது.

## The Sunday Observer:

### விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களால் வெளியிடப்பட்ட தப்புத்தகவல்கள் உடைத்தழிக்கப்பட்டது.

ஜெனிவாவில் இலங்கைக்கெதிரானவர்களாலும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாலும் மேற்கொள்ளப்பட்ட தப்புத்தகவல் செயற்பாடுகள் உடைத்தழிக்கப்பட்டதாக கலாநிதி பிரதீபா மகணமகேலா தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் தற்போதய கூற்றுக்களிலிருந்து இந்தியாவும் ஏனைய முக்கிய அங்கத்துவ நாடுகளும் இலங்கைக்கு எதிராக அவை முன்னர் கொண்டிருந்த தப்பபிப்பிராயங்களிலிருந்து விலகி வருவதுடன் இலங்கையின் முயற்சிகளை ஏற்றுக்கொள்ள தயாராகிவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்நிலையில் "அமெரிக்கா ஆரம்பத்தில் கொண்டுவந்த பிரேரணையை தவிர்த்து மற்றொரு புதிய பிரேரணையை கொண்டுவரும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றது" என அவர் தெரிவித்தார். இலங்கை அரசினால் தயாரிக்கப்பட்ட மனித உரிமைகள் தொழிற்பாட்டுத் திட்டம் 2011 - 2016 இனை உலகச் சமூகங்கள் வரவேற்றுள்ளது என மேலும் தெரிவித்த அவர் இந்நடவடிக்கைகள் இலங்கை அரசினால் தன்னிச்சையாக பல ஆண்டுகளின் ஆராய்ச்சியின் பலனாக உருவாக்கப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### புலி ஆதரவு கோரிக்கைக்கு ஜேர்மனியில் விழுந்த பெருத்த அடி

ஜேர்மனியில் 65,000 தமிழர்கள் வாழ்கின்ற போதிலும் அவர்கள் இலங்கைக்கு எதிரான சாதாரண எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றுக்குக் கூட தமது ஆதரவை தெரிவிக்காது இருக்கின்றார்கள் என ஜேர்மனியில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் 2ம் செயலாளர் கோகுல ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார். தமிழ் ஆதரவாளர்கள் இலங்கையின் சுதந்திர தினத்தில் பேர்ஸினிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் ஒன்றிற்கான அழைப்பினை விடுத்திருந்த போதும் 5000 தமிழர்கள் வாழும் பேர்ஸினிலிருந்து வெறும் 5 தமிழர்கள் மட்டுமே கூடியதாக தெரிவித்தார். இது எதனை வெளிப்படுத்துகின்றது என்றால், ஜெர்மானிய தமிழர்கள் இலங்கை அரசின் மீது விசுவாசம் கொள்ளத் தொடங்கியுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

### மிக நுணுக்கமான நடவடிக்கையினை ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபை முன்மொழிய வேண்டும் — வாசுதேவ

இலங்கையில் தற்போதுள்ள நிலை தொடர்பாக நியாயமானதும் வெளிப்படையானதுமான விடயங்களை விவாதித்து அவற்றின் நுணுக்கமான விடயக் கையாள்கை தொடர்பான முன்மொழிவுகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபை மேற்கொள்ள வேண்டும் என சமூக ஒற்றுமை மற்றும் தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். பொறுப்புக் கூறுதல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபை ஒரு மேலெழுந்தவாரியான கருத்தினை முன்மொழிகிறதே ஒழிய நுணுக்கமான முன்மொழிவுகள் எதனையும் தற்போது வரை முன்மொழியவில்லை என மேலும் தெரிவித்தார்.

### தனியார் ஆய்வுகூடங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும்.

தனியார் ஆய்வு கூடங்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட பின்னரே செயற்பட வேண்டும். தற்போது பெருமளவு பதிவு செய்யப்படாத ஆய்வு கூடங்கள் இயங்குவதால் அவற்றின் மீது சுகாதார அமைச்சினால் கட்டுப்பாடுகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. உண்மையில் எத்தனை பதிவு செய்யப்படாத ஆய்வுகூடங்கள் இலங்கையில் உள்ளன என்பது தெரியாமலுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Leader

### கடற்படை பயிற்சியில் ரொக்கட் தாக்குதல் — விசாரணைகளை மேற்கொள்ளும் கடற்படையினர்

வேலணை கடற்படைப் பயிற்சி முகாமில் புதிய கடற்படை சிப்பாய்களுக்கு நடந்த பயிற்சியின் போது அவர்கள் மீது ஏவப்பட்ட ரொக்கட் குண்டு வெடித்து 6 பயிற்சியாளர்கள் காயமடைந்தது தொடர்பான விசாரணைகளை கடற்படை ஆரம்பித்துள்ளது. இவ்வெடிப்பினைத் தொடர்ந்து பயிற்சி பெறும் படையினரின் பாதுகாப்பு தொடர்பான முப்படையினரும் எவ்வெவ் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனும் கரிசனை எழுந்துள்ளது. ஆர்.பி.ஜி பயிற்சியினை வழங்கும் பொழுது பின்புறமாக அக்குண்டு ஏவப்பட்டதால் அதன் பயிற்சியாளர் உட்பட 6 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் சில குறிப்பிட்ட ஆயுதங்களினால் பயிற்சிகளை மேற்கொள்ளும் போது உண்மையான வெடிகுண்டுகளையே பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அதனால் தான் இவ்வாறானவை நிகழ்கின்றன என மேலும் தெரிவித்தார்.

### பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் ஐக்கிய இராச்சியம் கலந்து கொள்ளாது.


பிரித்தானிய பாராளுமன்றின் வெளி விவகாரங்களுக்கான தேர்வுக்குழு இலங்கையில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாயத் தலைவர்கள் மாநாட்டில் பிரித்தானியா கலந்துகொள்ளக்கூடாது எனும் வேண்டுகோள்களை பெற ஆரம்பித்துள்ளது என பிரித்தானிய எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். தற்போது வரை பிரித்தானியா இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்கான எவ்வித தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லை என தெரியவருகின்றது. இலங்கையில் மனித உரிமை விவகாரங்கள் மேலெழுந்துள்ள இவ்வேளையில் இவ்வாறு கலந்து கொள்வது தொடர்பான எவ்வித உறுதிமொழிகளையும் பிரித்தானியா வழங்கவில்லை.

### பிரேரணையைப் படிப்பதற்காக தேர்வுக்குழு

அமெரிக்காவினால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் அங்கத்தவர்களிடமிருந்து மாதிரிப் பிரேரணையை கற்றறிந்து கொள்வதற்காக அரச குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது மாதிரிப் பிரேரணையின் விடயங்களைப் பெற்றுக் கொண்டுள்ள அரசு அம் மாதிரிப் பிரேரணை தொடர்பாக தொடர்பாக கற்றறியும் நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். இக்குழு மாதிரிப் பிரேரணையைக் கற்றறிந்து அவை தொடர்பான பரிந்துரைகளை அரசுக்கு வழங்கிய பின் அரசு இவ்விடயம் தொடர்பான தனது கருத்துக்களை வெளியிடும் எனவும் தெரிவித்தார்.

### மாத்தளையில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடுகள் தொடர்பாக ஜே.வி.பி முடிவெடுக்கவில்லை.

மாத்தளைப் புதைகுழிகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டை அரசசார்பற்ற நிறுவனமொன்று கோரியுள்ளது தொடர்பாக தமக்கு தற்போது வரை உத்தியோக பூர்வமாக தெரியாது என்றும் அவை தொடர்பான என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதை தாம் இன்னும் முடிவு செய்யவில்லை என்றும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்கா தெரிவித்தார்.




## ஐ.பி.எல் தொடக்க விழா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குகிறார்
### இந்தி நடிகர் ஷாருக்கான்



கிரிக்கெட் ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்படும் 6-வது ஐ.பி.எல். போட்டிகள், ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி தொடங்க இருக்கிறது. தொடக்கவிழா நிகழ்ச்சிகள், 2ஆம் திகதி மாலை, கொல்கத்தாவின் சால்ட் லேக் ஸ்டேடியத்தில் நடைபெற உள்ளது. துவக்க விழா நிகழ்ச்சிகளை ஷாருக்கான் குழுவினர் நடத்த இருப்பதாகத் தெரிகிறது. சென்ற ஆண்டு ஐ.பி.எல். இறுதிப் போட்டியில், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியினரை வென்று, கோப்பையைக் கைப்பற்றிய கொல்கத்தா குழுவினரின் அணி உரிமையாளரான ஷாருக்கானுக்கு, இது மற்றொரு வெற்றியாகும். காத்ரினா கைப், பிரியங்கா சோப்ரா போன்ற பிரபல சினிமா நட்சத்திரங்கள் பங்குபெறுவதால், இந்நிகழ்ச்சி பகட்டான ஒரு விழாவாகக் களைகட்டக் கூடும். இந்நிகழ்ச்சிகளை நடத்தும் உரிமத்தை ஷாருக்கான் பெற்றதில், அவரைவிடவும், அவரது நண்பரான ராஜீவ் சுக்லா அதிக மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்தார். பெரிய அளவில் ஒருங்கிணைத்து நடத்துவது என்பது இந்தக் குழுவினரால் நடத்திக்காட்டப்பட்ட ஒன்றாகும் என்று ஐ.பி.எல். தலைவரான சுக்லா கூறினார்.

## எட்டு சதங்களுடன் விறுவிறுப்பாக நடந்த இலங்கை - வங்கதேசம் முதல் டெஸ்ட் கிரிக்கட் போட்டி சமனிலையில்



இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள வங்கதேச கிரிக்கெட் அணி, 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் டெஸ்ட் போட்டி காலி மைதானத்தில் கடந்த 8-ம் திகதி தொடங்கி நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்று முதலில் ஆடிய இலங்கை அணி, முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்புக்கு 570 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தம் (டிக்ளேர்) செய்தது. திரிமன்னே (155 ஓட்டங்கள்), சங்ககாரா (142 ஓட்டங்கள்), சண்டிமால் (116 ஓட்டங்கள்) ஆகியோர் சதம் அடித்தனர். பின்னர் முதல் இன்னிங்சை ஆடிய வங்கதேச அணி 638 ஓட்டங்கள் குவித்தது. அணித்தலைவர் முஷ்பிகுர் ரஹீம் இரட்டைச் சதம் அடித்து அசத்தினார். சர்வதேச போட்டிகளில் இரட்டைச் சதம் அடித்த முதல் வங்கதேச வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றார். இதேபோல் முகமது அஷ்ரபுல் 190 ஓட்டங்களும், நசீர் உசைன் 100 ஓட்டங்களும் குவித்து அணிக்கு வலு சேர்த்தனர்.

இதையடுத்து 2-ம் இன்னிங்சை ஆடிய இலங்கை அணி, 4-ம் நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 116 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஆட்டத்தின் இறுதி நாளன்றும் தொடர்ந்து ஆடிய இலங்கை அணிக்கு தில்ஷான் (126 ஓட்டங்கள்), சங்ககாரா (105 ஓட்டங்கள்) ஆகிய இருவரும் சதம் அடித்து, முன்னிலை பெற வைத்தனர். விதானகே 59 ஓட்டங்கள் அடித்தார். இதனால் 4 விக்கெட் இழப்பிற்கு 335 ஓட்டங்கள் எடுத்த நிலையில் இடைநிறுத்தம் (டிக்ளேர்) செய்வதாக இலங்கை அணித்தலைவர் அறிவித்தார். இதனால் வங்கதேச அணியின் வெற்றிக்கு 268 ஓட்டங்கள் என நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை எதிர்கொண்ட வங்க தேச அணி, ஒரு விக்கெட் இழப்பிற்கு 70 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆடிக்கொண்டிருந்தபோது பந்து பரிமாற்றங்கள் முடிவடைந்தது. எனவே, இப்போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலை ஆனது. இரட்டைச் சதம் அடித்த வங்கதேச வீரர் முஷ்பிகுர் ரஹீம் ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார். இப்போட்டியில் இரு இன்னிங்ஸ்களிலும் சேர்த்து 8 சதங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதையடுத்து இரு அணிகளும் மோதும் 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கொழும்பில் 16-ம் தேதி தொடங்குகிறது.

## வொற்சனும் கிளார்க்கும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்

அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க்கும், உப தலைவர் ஷேன் வொற்சனும் தங்களுக்கிடையிலான முரண்பாடு-களைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் திறமை வெளிப்பாடுகளுக்கான பொது முகாமையாளர் பற் ஹொவார்ட் தெரிவித்துள்ளார்.



வீரர்களான ஷேன் வொற்சன், பற் கமின்ஸ், மிற்சல் ஜோன்சன், உஸ்மான் கவாஜா ஆகியோர் இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது போட்டியில் சேர்க்கப்பட மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளதோடு, அதன் பின்னர் ஷேன் வொற்சன் அவுஸ்திரேலியாவிற்குத் திரும்பியுள்ள நிலையிலேயே பற் ஹொவார்ட் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். மைக்கல் கிளார்க்கும், ஷேன் வொற்சனும் இணைந்து செயற்படும்போது முரண்பாடுகளைக் கொண்டுள்ளதாகவும், அதை இருவரும் சேர்த்துத் தீர்த்துக்கொள்ள வேண்டுமெனவும் பற் ஹொவார்ட் தெரிவித்துள்ளார்.

## ஐ.சி.சி தரவரிசையில் முதல் முறையாக முதல் 10 இடத்திற்குள் நுழைந்தார் - புஜாரா

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.) டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இந்திய வீரர் புஜாரா முதல் முறையாக டாப்-10 இடத்திற்குள் நுழைந்துள்ளார். ஐதராபாத் டெஸ்டில் இரட்டை சதம் அடித்ததன் மூலம் அவர் 23-வது இடத்தில் இருந்து 10-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார். சச்சின் தெண்டுல்கர் 19-வது இடத்திலும் (2 இடம் சரிவு), அணித்தலைவர் டோனி 21-வது இடத்திலும், விராட் கோலி 24-வது இடத்திலும் உள்ளனர். முதல் இரு இடங்களில் தென் ஆப்பிரிக்காவின் அம்லா, ஆஸ்திரேலியாவின் மைக்கேல் கிளார்க் இருக்கிறார்கள்.

பந்து வீச்சாளர்களின் தரவரிசையில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் தமிழகத்தை சேர்ந்த அஸ்வின் முதல் முறையாக முதல் 10 இடத்திற்குள் வந்துள்ளார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2-வது டெஸ்டில் மொத்தம் 6 விக்கெட்டுகள் கைப்பற்றிய அஸ்வின் 11-வது இடத்தில் இருந்து 8-வது இடத்தை பிடித்துள்ளார். முதல் மூன்று இடங்களில் தென் ஆப்பிரிக்காவின் ஸ்டெயின், பிலாண்டர், பாகிஸ்தானின் சயீத் அஜ்மல் தொடருகிறார்கள்.




## காதலனைத் தாக்கியதாக புகார்: கைதாகிறார் முன்னாள் டென்னிஸ் வீராங்கனை கேப்ரியாட்டி

முன்னாள் நம்பர் ஒன் டென்னிஸ் வீராங்கனை ஜெனீபர் கேப்ரியாட்டி. 37 வயதான அவர் 3 கிராண்ட்சிலாம் பட்டம் பெற்றுள்ளார். 2001-ம் ஆண்டு ஆஸ்திரேலிய ஓபன், பிரெஞ்சு ஓபன் பட்டத்தையும், 2002-ம் ஆண்டு ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தையும் கைப்பற்றினார். 1992-ம் ஆண்டு ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்றார். ஜெனீபர் கேப்ரியாட்டிக்கும் முன்னாள் பல்கலைக் கழக கோல்ப் வீரரான இவான் பிரானன் என்பவருக்கும் இடையே காதல் இருந்தது. 10 மாதமே நீடித்த இந்த காதல் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முறிந்தது. இந்த நிலையில் கடந்த மாதம் 14-ந்தேதி காதலர் தினத்தன்று உடற்பயிற்சி கூடத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த முன்னாள் காதலர் இவான் பிரானை கேப்ரியாட்டி அடித்து உதைத்தாக புகார் கூறப்படுகிறது. அவரது மார்பில் 4 முறை கேப்ரிடியாட்டி குத்தியதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புகாரின் பேரில் ஜெனீபர் கேப்ரியாட்டி கைது செய்யப்பட வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. கேப்ரியாட்டி விளையாடும் காலக்கட்டத்தில் பல சர்ச்சையில் சிக்கியவர் ஆவார். ஊக்க மருந்து பயன்படுத்திய அவர் 1994-ம் ஆண்டு தற்கொலைக்கு முயன்று அதில் இருந்து உயிர் தப்பினார்.



## பாடசாலைகளுக்கு இடையேயான வலயமட்ட கராத்தே போட்டிக்கான தெரிவுப் போட்டி

தம்பலகாமம் தி/ஆதி கோணேஸ்வரா மகா வித்தியாலயத்தில் கடந்த 05.03.2013 அன்று வலயமட்ட கராத்தே போட்டிக்கான தெரிவுப்போட்டி அப்பாடசாலையில் நடைபெற்றது. இதன்போது அப்போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள், நடுவர்கள், ஆசிரியர் சங்கத்தினர் பாடசாலை அதிபர் திரு. வே. தவராஜா மற்றும் பிரதான பயிற்றுவிப்பாளர் திரு. ஆர். சத்தியராஜன் ஆகியோரையும் படத்தில் காணலாம் இப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் இப்பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதி நாளான 14.03.2013 அன்று வழங்கப்பட்டது. ஆயிரம் பாடசாலை திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்ட இப்பாடசாலையின் மாணவர்கள் பல கோணங்களிலும் தமது திறமைகளை வெளிக்காட்டி உள்ளனர். இனிவரும் காலங்களில் கராத்தே விளையாட்டின் மூலமும் தம் பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்தி தம் திறமைகளை வெளிக்கொணர்வர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ விநியோகத்தர்கள் - திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 16. 03. 2013ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.